www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாதஇதழ்

சுவடி : 7.12 திருவள்ளுவர் ஆண்டு 2050

14.04.2019 - 13.05.2019

ISSN : 2195-6480

FREE Magazine

## இந்தியாவால் ஈழத் தமிழ் இனம் அழிந்தது! தமிழகத் தமிழினம் தப்புமா?

## ஏழு என்னும் ஒரு மந்திர இலக்கம்

தமிழக அரசியல் ஓர் அலசல்



FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS BEST FOODS
வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்
TKS
BESTFOODS
Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883
புதுவருட
சிறப்பு மலிவு விற்பனை
சித்திரை மாதத்தில்
வீட்டிற்குத் தேவையான அனைத்து
பொருட்களையும் வியக்க வைக்கும்
விலையில் அள்ளித்தர
காத்திருக்கும் உங்கள் நிறுவனம்
கொள்வனவுக்கு
முந்துங்கள்!
கையிருப்பு உள்ளவரை
மட்டுமே!!
வெகு விரைவில்...
TKS இன் வாடிக்கையாளருக்கான
புதிய பரிமாணம்
காத்திருங்கள்! என்றும் உங்களுடன்...
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de

# DER VERBESSERTE SUPER-TARIF




**ortel MOBILE**




**19,99 €**[15) ] **/4 Wochen**

## ஒரே சிம்மில் இருந்து...
## யேர்மனிக்கு முற்றிலும்
# இலவசம்


**NEU: Deutschland Flat**

ஐரோப்பா, இந்தியா
மேலும் பல நாடுகளுக்கு
250 நிமிடங்கள்

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~3 GB~~ 4 GB
- Surfen&Telefonieren in der EU
- Deutschland Flat

## 4GB Internet

**ஐரோப்பிய நாடுகளில் இருந்து பயன்படுத்தலாம்**
**4GB முடிந்தால் மீண்டும் 9 யூரோக்களுக்கு பெற முடியும்**





AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14.சித்திரை 2019 13 - வைகாசி 2019
சுவடி / ISSUE 7.12

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்,**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**எமது நன்றியும், வணக்கமும்....**

## "பூனை இளைச்சால் சுண்டெலியும் புத்தி சொல்லுமாம்"

மறதி என்பது மனித குலத்துக்கு கிடைத்த மாபெரும் இயற்கை வரம். அதனால் எமது மனநலமும், உடல் நலமும் சீரடைந்து, சிறப்பான வாழ்வை அனுபவிக்க முடிகிறது என்பதும் அறிவியல் போற்றும் உண்மைதான். ஆனால், எவற்றை எல்லாம் மறக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் மறக்காமல், மன வேதனை கொள்வதும், எவற்றை எல்லாம் மறக்கக் கூடாதோ அவற்றை எல்லாம் மறந்து, வெறும் ஐந்தறிவு பெற்ற மிருகங்கள் போல வாழ்வதும் மிகப் பெரும் அழிவுக்கே வழி அமைத்து விடும். அத்தகைய மனக் குறையால் ஈழத் தமிழினம் அழிந்து கொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

2009ல் நடத்தப்பட்ட தமிழ் இன அழிப்புப் போரில் இந்தியாவின் பங்கு சிங்களத்தின் பங்கினை விடமிக அதிகம். அந்தப் போரைத் தொடக்கி வைத்ததே இந்திய அரசு என்பதும் உலகறிந்த உண்மை. போர் நிறுத்தம் அறிவித்து 10 ஆண்டுகள் முடியும் தருவாயிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான இழப்பீடுகளோ, நிவாரணங்களோ, போர்க்கால குற்ற விசாரணைகளோ நடத்தப் படவில்லை. இனிமேலும் நடக்கும் என்ற நம்பிக்கை கூட எந்தத் தமிழ் மகனுக்கும்கிடையாது.

அப்படியான நிலையில் இலங்கை அதிபர் தேர்தலில் இந்தியா நடுநிலை வகித்து, 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் எமக்குத் தீர்வை பெற்றுத்தர வேண்டும் என முன்னாள் வடமாகாண சபை முதல் அமைச்சர் திரு. விக்கினேஸ்வரன் கேட்டிருப்பது, பெரும் அதிர்ச்சியைத் தருகிறது. தமிழ் இனத்துக்கே உரிய அடிமைப் புத்தியா? அல்லது முதுமை காரணமாக ஏற்பட்ட மறதி நோயா? காரணம் எனத் தெரியவில்லை.

**மோடியின் இந்திய மத்திய அரசின் ஆட்சியில் தமிழகத் தமிழ் மக்களே துப்பாக்கிச் சூடும், தடி அடி வாங்கியும், பல்வேறு சமூக குற்றங்களுக்கும் எவ்விதத் தீர்வும் இன்றித் தவிக்கும் நிலையிலும், எமது உயிர் உடமை எல்லாம் பறித்துப் போன கொலைகாரக் கூட்டத்திடம் ஈழத் தமிழ்த் தலைமை எதற்காக இப்படி மண்டி இட வேண்டும்? கொத்துக் கொத்தாக மக்கள் படுகொலை செய்த போதிலும் எம் இனம் இப்படி மானம் கெட்டு, மண்டி இடவில்லை என்பதை இவரால் எப்படி மறக்க முடிந்தது?**

**இவரைப் பார்க்கும் பொழுது புதிய வட மாகாண ஆளுநராக பதவி ஏற்றுள்ள திரு.சுரேன் ராகவன் வவுனியாவில் நடத்திய புத்த மத மாநாட்டுக்கு ரூ.9,16,600 தண்டச் செலவு செய்து, யார் மனதைக் குளிரச் செய்தாரோ தெரியாது?. ஆனால் அவரும் ஒரு தமிழராம். அதனால் அவரே மேல் எனலாம். அவரே அதே வாயால், ஜெனிவாவில் ஒரு நாளில் செலவாகும் பணத்தில், ஒரு ஏழைக் குடும்பம் 6 மாத காலத்துக்கு வசதியாக வாழ முடியும் என்ற புத்த மத போதனையும் செய்தாராம். "பூனை இளைச்சால் சுண்டெலியும் புத்தி சொல்லுமாம்" என்பது போல அவரது கதை இருக்கிறது.**

எப்படியோ ஜெனிவாவில் 10ம் திருவிழாவும் நடந்து முடிந்து விட்டது. பேசுவார் எல்லாம் பேசினார்கள், அழுவார் எல்லாம் அழுதார்கள், வேடிக்கை பார்க்கவும் ஒரு கூட்டம். உவங்கள் ஒரு காலமும் ஒற்றமையாய் நடக்க மாட்டான்கள். அதுதான் பாருங்கோ! இந்த நிலை என்று வக்கணையாய் பேசும் புத்திசாலிகள் தமது அதி மேதாவித் தனத்தை காட்டும், அற்ப ஈனப் பிறவிகளும் எம்மிடையேதான் இருக்கிறார்கள்.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பும் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற குரலும், எங்கோ ஒரு மூலையில் ஒலிக்கிறதாம். தமிழ் மக்கள் யாரோ ஒரு வேண்டாத ஒருவருக்கு, வாக்களிக்க வேண்டிய

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

கட்டாயம் இருக்கிறது. தமிழ் மக்கள் வாக்களித்தாலும், வாக்களிக்காமல் விட்டாலும் ஏதோ ஒரு பிசாசுக்கோ, பேய்க்கோ அடங்கி வாழத்தான் வேண்டும். முன்னர் குமார் பொன்னம்பலம், பின்னர் சிவாஜிலிங்கம் தமிழ் வாக்காளருக்கான வடிகாலாக போட்டி இட்டனர். ஆனால் மிகக் குறைந்த தமிழரே வாகக்களித்து, தமிழ் மானத்தைக் காப்பாற்றினர்.

**அடுத்த தேர்தலில் 3வது தெரிவாக கூட்டமைப்பு நிறுத்தச் சரியான பேர்வழி சுமந்திரன்தான் என்பதை அனைவரும் ஏற்றே ஆகவேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த அளவுக்கு முதுகெலும்பு இருக்குமா? என்பது சந்தேகமே.**

எப்படியோ...! இளிச்ச வாய்த் தமிழன் என்னவாகப் போனாலும் பரவாயில்லை, அவனை வைச்சு அரசியல் செய்து பிழைப்பவர்கள் மட்டும் பதினாறும் பெற்று, நல்லாய் இருக்கட்டும் என வாழ்த்தி, மீண்டும் சந்திக்கும் விருப்புடன் விடைபெறும்....


**ஆசிரியர், அகரம் குழுமம்**



# இந்தியாவால் ஈழத் தமிழ் இனம் அழிந்தது! தமிழகத் தமிழினம் தப்புமா?








இந்தியப் பிரதமர் நரேந்திரதாஸ் மோடி நன்கு பயிற்றப் பட்ட இந்து மதத் தீவிரவாத அமைப்பான ராஸ்டிய சேவா சங் எனப்படும் ஆர்.எஸ்.எஸ். (RSS) அமைப்பின் உறுப்பினர். இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்தே இந்த அமைப்பின் கொலை வெறி, இந்து ஆரிய பார்ப்பனிய மேலாதிக்க செயற்பாடுகள் இடம் பெற்றுள்ளதை வரலாறு கண்டுள்ளது.


காந்தியின் கொலையுடன் ஆர்.எஸ்.எஸ். தொடர்பு காரணமாக அவ்வமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக, இந்தியாவின் முதல் பிரதமரான நேரு மாநில அரசுகளுக்கு 1947ல் எழுதிய பதிலில் ஆர்.எஸ்.எஸ்.தேச விரோத, இனவாத அமைப்பு என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. தனியான இராணுவ அமைப்பு, நாசிகளின் வழிகளை மிகக் கடுமையாக பின்பற்றுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், முதலாவது பதில் பிரதமரான சர்தார் வல்லபாய் பட்டேல் 'அவர்கள் நாட்டை நேசிக்கும் தேசியவாதிகள்' என 1948ல் பாராட்டினார். அந்த பட்டேலுக்குத்தான் அண்மையில் உலகின் மிக உயர்ந்த சிலையை நிறுவி, மோடி திறந்து வைத்தார்.

ஆனால், அதன் இரகசியத் தன்மையும், வன்முறைகளும் அண்மைக் காலமாக குறிப்பாக கடந்த 2014 தேர்தலின் பின்னர்தான் தமிழ் மக்களால் தெரிந்து கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அது வரை குஜராத் மாநிலத்தின் முதல் அமைச்சராக மூன்று முறை ஆட்சி நடத்தி பெரும் வெற்றியும், புகழும் கொண்ட ஒருவராக மட்டுமே வெளி உலகத்துக்கு மோடி தெரியப் பட்டிருந்தார்.

அவரது தனிப்பட்ட குடும்ப









த. எதிர்மன்னசிங்கம்

வாழ்வும், குஜராத்தில் அப்பாவி மக்களும், அவர்களது நிலங்களும் எவ்வாறு கொள்ளை போயின? இஸ்லாமிய மக்கள் எத்தனை கொடூரமாகத் தாக்கி கொல்லப் பட்டனர்? அவற்றில் அவரது குற்றத் தொடர்புகள் எவ்வாறு காவல் மற்றும் நீதித் துறைகளால் மறைக்கப் பட்டும், அவை தொடர்பான வழக்கு என்ன ஆயிற்று? போன்ற விபரங்கள் ஒரு சிலரே அறிவர். அவற்றைப் பேச அவரது பிரச்சாரப் புகழ் விழுங்கி விட்டது.

சிறு வயது தொடக்கம், மோடி இந்த அமைப்பின் தீவிர தொண்டனாக பயிற்சி பெற்ற இராணுவ மனநிலையை உருவாக்கி, ஒரு சர்வாதிகாரி போலவே இயங்கி வருகிறார். அவரது எதிர்கால இந்தியா என்பது இலங்கை, மற்றும் மாலை தீவுகள் அடங்கலான 'அகண்ட பாரதம்' என்பதாகவே தெரிகிறது. அவரது வெளி உறவுக் கொள்கையும், அத்தகைய இலக்கை நோக்கியே பயணிப்பதாகத் தெரிகிறது.

மோடியைப் பற்றி இந்தியாவின் பிரபல ஊடகர், அரசியல் விமர்சகர், எழுத்தாளர் போன்ற பன்முகத் திறமைகளால் உலகப் பிரபலம் பெற்ற அருந்ததி ராய் பின் வருமாறு எழுதியிருந்தார். மன்மோகன் சிங் ஆட்சியால் திருப்தி அடையாத முதலாளித்துவ சமூகம், மோடியை வெற்றி பெற வைத்து, தனது விருப்பங்களை அடைந்துவிட எத்தனிக்கிறது எனக் குறிப்பிட்டிருந்தார். மோடி இப்பொழுது அதானி அம்பானிகளின் கூட்டில், குஜராத்தை பட்டாப் போட்டு, ஏக்கருக்கு 1ரூபாய் என்று பல்லாயிரம் ஏக்கர் விவசாயிகள், மலைசாதி மக்களின் நிலங்களைத் தாரை வார்த்து, பிரதமர் பதவியைப் பிடித்தவர்.

உலக பன்னாட்டு முதலாளிகளின் சுரண்டல் பசிக்கு இப்பொழுது தமிழக தமிழரின் காவேரி ஆற்றுப் படுகை, கனிம வளங்கள், ஆறுகள், மலைகள் என்பன இரையாக்கும் முயற்சியில் இந்த தேர்தல் வெற்றி பா.ஜ.க.வுக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய அரசின் அனைத்து அரசுத் துறைகளும் இப்பொழுது ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கத்திற்குள் கொண்டு வரப்பட்டு விட்டது. இந்தத் தேர்தலை மோடியின் அரசு நேரிய முறைகளில் மக்களின் ஆதரவோடு, பலம் வாய்ந்த கட்சியாக வரும் வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே உள்ளது.

மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சி பல கட்சிகளின் ஆதரவுடன் செயற்பட்ட சிறுபான்மை அரசு என்பதால், முதலாளித்துவ சமூகத்தினரின் தேவைப்படி சட்டங்களை இயற்ற முடியாமலும், இயற்றப்பட்ட சட்டங்களை நிறைவேற்ற முடியாமலும், உலக வர்த்தக அமைப்புகளின் விருப்பங்களை நிறைவு செய்ய முடியாத நிலைமையில் இருந்தார்.

அப்படித்தான் உலக வர்த்தக ஒப்பந்தம், ஹைட்ரோ கார்பன், கெயில் வாயுத் திட்டங்கள், ஜல்லிக் கட்டு தடை. நீட் தேர்வு முறை என்பவை தி.மு.க. ஆதரவுடன் நிறைவேற்றப் பட்ட நிலையிலும், தமிழ் நாட்டில் செல்வி




ஜெயலலிதாவின் ஆளுமை மிக்க எதிர்ப்புகளால், தடைப்பட்டுக் கிடந்தன. எனவே, வாக்குப்பதிவு இயந்திரங்களின் மூலம் மோசடிகள் செய்யவும் மோடி அரசு தயங்காது என தமிழகத்தின் மிக முக்கிய அரசியல் சமூக விமர்சகர், செயற்பாட்டாளர் வண. பிதா ஜெகத் கஸ்பார் எச்சரித்துள்ளார்.

யாழ்ப் பாணத்தைக் கைப்பற்ற புலிகள் கைக்கு எட்டிய தொலைவில் சுற்றி வளைத்து 40,000 சிங்களப் படைகளின் பாதுகாப்பைக் கருதியும், படை முகாம்களைக் காப்பாற்றவும், இலங்கை அரசு வைத்த கோரிக்கையால் வாஜ்பாய் புலிகளை மிரட்டி, நிலைமையை இலங்கை அரசுக்கு சார்பாக மடை மாற்றியது வாஜ்பாயின் தனிப்பட்ட நேரடித் தலையீடு.

அதே வாஜ்பாயிதான் சிங்களவரும், நாமும் ராமனின் வம்சம். தமிழர் இராவணனின் வம்சம். அதனால் தமது ஆதரவு சிங்களவருக்குத்தான் என மக்களவையில் பேசி, சிங்கள இராணுவத்தின் படைகளுக்கு அதிசக்தி வாய்ந்த ராடார் கருவிகளை வழங்கி, புலிகளுக்கு எதிரான போரை நடத்த, அக்கருவிகளை இயக்க, இந்திய அதிகாரிகளையும் வழங்கி உதவினார். போரின் பொழுது இந்தியப் படைய அதிகாரிகளும் பங்கேற்றனர் என்கிற செய்திகள் பின்னர் வெளியாயின.

சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி ஆட்சிதான் ஈழப் போரை முன்னின்று நடத்தியது என்பதை, மகிந்த ராஜபக்ஸ உட்பட அனைத்து சிங்களத் தலைவர்களும் அமைதிப் பேச்சின் அனுசரணையாளர் எரிக் சோல்ஹைமும் கூறி வருவதை எவரும் அறிவர்.

ராஜீவ் காந்தி கொலையில் புலிகளைத் தொடர்பு படுத்தியும், தி.மு.க. மூலம் புலிகளுக்கான ஆதரவு நிலையை பொய்யான 2ஜீ வழக்கை போட்டு, ஈழத் தமிழின அழிப்பை செய்ததே இந்தியாதான்.

இதுவும் ஒரு சர்வதேச நாடுகளின் இராணுவ கேந்திர பொருண்மிய காரணங்களின் நிமித்தமே! என்பது போருக்குப் பின்னரான கள நிகழ்வுகள் காட்டுகின்றன.

2014 பொதுத் தேர்தலில் குஜராத் மாநிலத்தில் 3 முறை முதல் அமைச்சராக விளங்கிய நரேந்திர மோடி, மிகப்பெரும் பிரச்சார அலைகளால், அதிகத் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துக் கொண்டார். அவருக்கு அத்தகைய அசுர பலத்தை கோடீசுவர, உலக பன்னாட்டு முதலாளிகளும், அதானி-அம்பானிகளின் தலைமையில் இந்திய கோடீசுவரர்களின் அதீத பணபல ஆதரவும், மிகப்பெரும் விளம்பரத்தின் மூலம் பெற்றுக் கொடுத்தன.

**“வெளி நாடுகளில் சோனியா காந்தியும், அவரது காங்கிரஸ் கட்சியினரும் இலஞ்சம் ஊழல் மூலம் பதுக்கி வைத்த கோடானு கோடி ரூபாய்கள் பெறுமதியான கறுப்புப் பணத்தை, இந்தியாவுக்கு மீட்டு வந்து இந்தியாவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 15 இலட்சம் இந்திய ரூபாய்களைத் தருவேன்” என்ற பிரச்சாரத்தை செய்து, மக்களின் அகோர ஆதரவால் தனிப் பெரும் கட்சியாக பாரதீய ஜனதாக் கட்சியை வெற்றி பெறச் செய்தார்.**

அந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது என கணக்குப் போட்டு, ஏற்படப் போகும் கூட்டணி ஆட்சியில் பிரதமராகும் கனவோடுதான் தமிழ் நாட்டில் ஜெயலலிதா “இந்த லேடியா...? அல்லது குஜராத்தின் மோடியா...?” எனப் போர்க் குரல் எழுப்பி, 40 தொகுதிகளில் 37 வெற்றிகளைப் பெற்று, வெறும் 3 தொகுதிகளில் மட்டுமே மோடி,

# AMMA's food

## Dortmund

அன்பான உபசரிப்போடும், ஆனந்தமாய் கொத்து ரொட்டி, இடியாப்பக் கொத்து, புட்டுக் கொத்து, இட்லி, தோசை, மசாலா தோசை, பிரியாணி, பாலப்பம் இன்னும் பல வகையான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கேற்றவாறு உண்டு மகிழ்ந்திட என்னும் உங்கள் நினைவில் நிற்கும்







## அம்மா’ஸ் உணவகம்

வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்





**0049 1776 794 261**
**0049 231 00 898 691**

ktheepan@hotmail.de
www.ammas-food.de
AmmasFood

**Rheinische Str-80A, 44137 Dortmund, Germany**




விஜயகாந்த் வை.கோ. அடங்கிய பா.ஜ.க. கூட்டணியை திருப்தி அடைய வைத்தார்.

ஆனால், தேர்தல் முடிவுகள் வெளியான பொழுது பா.ஜ.க. தனித்து ஆட்சி அமைக்கும் அசுர பலத்தோடும், காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சியாகும் தகுதி கூட இல்லாமல், வெறும் 44 பிரதிநிதிகளோடு ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேர்தல் முடிந்ததும் மோடியின் சுய உருவம் வெளிப்பட்டது. கோடிசுவரனான அதானி, அவரது அரசுப் பயணங்களின் அந்தரங்க அதிகாரி போல மாறி, அரசு ஒப்பந்தங்களையும், வங்கிகளின் பணத்தையும் மோடி தமது எண்ணம் போல அதானி தலைமையிலான முதலாளிகளின் தேவைகளுக்காகப் பயன்படுத்தினார்.

15 இலட்சம் கிடைக்கும் என நினைத்து வாக்களித்த மக்களின் வங்கிச் சேமிப்புகளையும், சுருக்குப் பைகளிலும், சரக்கு டப்பாக்களிலும் ஏழை எளிய மக்கள் தேடிவைத்த பணத்தை எல்லாம் வங்கிகள் வசப்படுத்த, 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டுகளைச் செல்லுபடி அற்றவை என இரவு 8 மணிக்கு வானொலி தொலைக் காட்சிகளில் மோடியே தனித்து அறிவித்து, பழைய நோட்டுகளை வங்கிகளில் கொடுத்து மாற்ற கடைசித் தேதியையும் அறிவித்து விட்டார்.

அந்த அறிவிப்பைச் செய்யும் முன்னர், அனைத்து அமைச்சர்களையும் அழைத்துத் தம்முடன் வைத்திருந்து, அவர்களின் கைபேசிகளை பிடுங்கி வைத்துக் கொண்டார் என்கின்றன செய்திகள்.

பழைய நோட்டுகளுக்கு பதில் புதிய நோட்டுக்களைப் பெற வங்கிகளில் புதிய நோட்டுகள் இல்லாமல் மக்கள் அவதியில் சிலர் உயிரையும் இழந்தனர். அவரது ஆட்சி முடிவுறும் நிலையில் ஊழலை ஒழித்து, கறுப்புப் பணத்தை மீட்டு, 15 இலட்சம் தருவேன் என்றதும், பணமதிப்பு குறைப்பு, மின் வழிப் பணப் பரிமாற்றம் என்பன அகில இந்திய அளவில் பணமுடை, வேலைக் குறைப்பு, வேலை வாய்ப்பு இல்லாமை போன்றவற்றால் கடந்த 40 ஆண்டுகளுக்கு

மேலாக இல்லாத அளவுக்கு மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்த வரை ஊழலை ஒழிக்கப் போவதாக வாக்களித்துப் பதவிக்கு வந்த மோடி, ஊழல் பணத்தைப் பங்கு போடுவதில் ஜெயலலிதாவுடன் மோதிக் கொண்டார். அதன் காரணமாக மோடியின் அண்ணன் தங்கை உறவு என்ற நிலைமாறி, ஜெயலலிதா சசிகலா எதிர் மோடி என்னும் பனிப் போரில் அம்மா மேலேயும், சின்னம்மா சிறையிலும் தள்ளப் பட்டனர்.

இப்பொழுது மொத்த ஊழல் பணமும், வருமான வரி மற்றும் இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள் மூலம் அள்ளிச் செல்லப் படுகின்றன. அவை எங்கே? யாரிடம் போகின்றன? போன்ற விபரங்கள் யாருக்கும் தெரியாது. தமிழ் நாட்டின் ஆட்சி அதிகாரம் அத்தனையும் யார் கையில்? என்பதும் தெரியாது. ஆனால் லேடி போய், மோடி வந்து வந்து போவது மட்டும் தெரிகிறது.

**லேடி எப்படி? ஏன் போனார்? அவருக்கு எதிரான உச்ச மன்றத் தீர்ப்பு, அவரது இறப்புக்காக இழுத்தடிக்கப் பட்டதா? குற்றமே இல்லாமல் குற்றப் பழியோடு புதைக்கப் பட்டாரா? என்ற கேள்வி தமிழக மக்கள் மனதைக் கறையான் போல அரித்துக் கொண்டிருக்கையில், அம்மாவின் பெயரால் பெரும்பான்மை ஆதரவு இல்லாத ஆட்சி நடக்கிறது.**

அவரின் காலடிகளில் விழுந்து, அரச பதவிகளை அனுபவித்த ஓ.பன்னீர் செல்வம் ஜெயலலிதாவின் மரணம் அறிவிக்கப்படும் முன்னரே, அவசர அவசரமாக நிரந்தர முதல் அமைச்சராக பதவிப்பிரமானம் செய்து கொண்டார். அதற்கு மாநில ஆளுநர் சிறப்புச் சேவை வழங்கினார்.

ஆனால் மோடிக்கும், லேடிக்கும் முன்னர் இருந்த டீலிங்கில் மாற்றம் ஏற்படக் காரணமாக ஊழல் பணத்தில் மோடி கேட்ட பங்குப் பிரச்சினை பெரிதாகி, மோடி லேடி இடையில் நிலவிய சுமூக உறவு முறிய, சின்னம்மாவின் கறாரான நிலைதான் காரணம் என்பதை மோடி தெரிந்து




கொண்டு விட்டதால், பெரிய லேடியை மருத்துமனையில் கூட மோடி பார்க்க வில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது. மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஏனைய வட மாநில அரசுகளைத் தன் வசம் ஆக்கியது போலவே, தனது அரசியல் சித்து வேலைகளை தமிழகத்திலும் தொடங்கியது.

ஜெயலலிதாவின் மர்ம மரணம் மாநில, மத்திய அரச அதிகாரிகளுக்கும், மோடிக்கும் தெரியாமல் நடந்திருக்க முடியாது. ஜெயலலிதாவின் மரணச் சடங்குகளின் போதே தமிழக அரசு, மோடியின் பிடிக்குள் வந்து விட்டது. ஆனால், அதற்கு அ.தி.மு.க. சின்னம்மாவின் தலைவரானதும், அவரது ஆதரவு கிடைக்காத நிலையில், இழுத்தடிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கின் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு, அதிரடியாக வழங்கப்பட்டு சசிகலா சிறைக்குள் போடப்படுகிறார்.

இப்பொழுது முட்டி மோதிக் கொண்டிருந்த பன்னீர் செல்வமும், பழனிச் சாமியும் பல்வேறு நெருக்கடிகள் மூலம், மோடியின் காலடியில் தஞ்சம் ஆகினர். அதே போல முட்டி மோதிக் கொண்ட பாட்டளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாசும், அ.தி.மு.க., விஜயகாந்தின் தே.மு.க.வும், தமிழ் மக்களை வறுத்து எடுத்து வரும் மோடியின் பா.ஜ.க.வுடன் இணைந்து தேர்தலைச் சந்திக்கின்றன.

தமிழகத் தமிழ் மக்களின் பாதுகாப்பையும், அவர்களின் எதிர்காலத்தையும் வளப்படுத்தும் திட்டங்களுடன் தனித்து தேர்தலில் போட்டி இடுவது செந்தமிழன் சீமானின் நாம் தமிழர் கட்சி ஒன்றுதான். ஆனால், பண பலமும், பாரம்பரிய வாக்குப் பலமும் நிறைந்த தி.மு.க காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, அதுவே ஈழத் தமிழின அழிப்பைச் செய்த கூட்டணி ஒரு புறம்.

மறு புறத்தில் கடந்த 5 ஆண்டுகளாக ஈழத் தமிழர் பற்றிச் சிறிதும் கண்டு கொள்ளாத, தமிழகத் தமிழரை துப்பாக்கிச் சூடுகள் வரை துன்புறுத்தும் அ.தி.மு.க. வின் தலைமையிலான பா.ஜ.க. என்கிற இரண்டு பிணந் தின்னிக் கழுகுகளின் மத்தியிலே, நாம் தமிழர் கட்சி என்கிற சிறு முயல் உயிர் பிழைப்பதே அரிதாகத் தெரியும் பொழுது, தமிழ் மக்களின் ஆதரவோடு அரசமைப்பது எப்படிச் சாத்தியமாகும்?






சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும் பொன்னுருக்குதல், இவையாவும் இங்கு செய்து தரப்படும்
ஒவ்வொரு வருடமும் தைமாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100 CHF என 12 மாதம் 1200 CHF இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com
nfo@nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
GUARANTEE
BEST PRICE
GUARANTEE
உயர்தர புடவைகள் மற்றும் துணி வகைகள் வாங்க சிறந்த இடம்
Rani palace
044 440 60 52
ranipalace60@gmail.com
Tel : 044 440 60 52
Neugasse 60, 8005 Zurich - Switzerland

# ImmoFinance
## Suisse GmbH





Contact :
**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

பாகம் -3

# தமிழீழ விடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்




**ஏன் மறுசீரமைப்பு இவ்வாறு நடைபெற வேண்டும்? என்பதற்குக் காரணமாக நான் கருதுவது...**

கற்பிதங்கள் ***(narratives)*** உணர்வுப் பூர்வமாக மக்களை பிணைக்கிறது. அரசியல் ஆதரவு உணர்வுகளாலே தீர்மானிக்கப் படுகினறன, பகுத்தறிவினால் அல்ல. பகுத்தறிவு என்பது உணர்வுகளுக்கு அடிமை என்ற அண்மைய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இதனடிப்படையில் கற்பிதங்கள் எவ்வாறு இன அரசியலைத் தீர்மானிக்கிறது என்று காஃப்மன் விளக்குகிறார். இதைப் பற்றிய எனது கட்டுரையை முடிவில் உள்ள சுட்டியில் காணலாம். அதுபோக வரலாறு என்பது தேசியத்தின் பாதையை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காராணி என்பதை தேசியம் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளுவது. அவ்வாறு இருக்கும் பொழுது, கற்பிதங்கள் சமூக மறுசீரமைப்புக்கும் பயன்படுகிறது என்பது வியப்பல்ல. இது காஃப்மன் தத்துவத்தின் நீட்சியாக எடுத்துக்கொள்ளலாம்.

ஓர் உயிரின் மறுசீரமைப்புக்கு மரபணு மாற்றங்கள் எவ்வாறு துணைபுரிகிறதோ, அதுபோல ஒரு சமூகத்தின் கற்பித மாற்றங்கள் சமூகத்தை மறுசீரமைக்கிறது. இது ஒரு விபத்து அல்ல. மனிதன் என்பவன் மரபணு-பண்பாட்டு கூட்டு பரிணாம வளர்ச்சியின் விளைவால் உருவானவன். உயிரியலாளர் ரிச்சர்டு டாக்கின்சு மரபணுக்கள் எவ்வாறு சுயநலமுடன் ***(selfish genes)*** உயிர்களை இயக்குகிறதோ, அதுபோல கருத்துகளும், கற்பிதங்களும் அவற்றின் சுயநல பரவலுக்காக ***(selfish memes)*** நம்மை இயக்குகின்றன என்கிறார். ஏன் எவரோ உருவாக்கிய கற்பிதங்கள் நம்மை இயக்க வேண்டும்? இது முட்டாள்தனமானது என்று நாம் நினைக்கலாம். மனிதனின் தன்மை அவ்வாறு பரிணாமத்தால் உருவாகியிருக்கிறது, அதை மாற்ற முடியாது. கற்பிதங்களின் இந்த இயக்கு சக்தியை உலகிலுள்ள அனைத்து சமூகங்களிலும் காணலாம்.

சிக்கலான அமைப்புகளின் பரிணாமத்தை ***(Complex Adaptive Systems)*** பற்றிய ஆராய்ச்சிகள் என்ன கூறுகிறது என்றால்? அழியும் நிலையில் உள்ள சில அமைப்புகள் தமக்கு சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தி மற்ற அனைத்தையும் விட உயர்ந்து பலசாலி ஆகின்றது. அவ்வாறு முடியாதவை அழிகின்றன. அதே நேரம் பலசாலியாக உள்ள அமைப்புகள் தமக்கு சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் தடுமாறுகின்றன. அவை காலப்போக்கில் சரிகின்றன.

**இனி ஈழப்போர் எவ்வாறு நமது வலுகூட்டலுக்கு வாய்ப்பளித்திருக்கிறது என்று பார்ப்போம்.**

# IMPORTAS
Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Subash · Rubicon · Renuté · PG tips · Patak's · Niru · Nestlé · Maggi · Kings · Gits · Elakkia · TRS · Thai Pride · Suryaa

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

## ஈழப்போரின் கொடை

புலிகள் இயக்கம் ஈழ நாட்டை அடைவதுதான் முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு இயங்கியது. இறுதிப்போரில் பல்வேறு சதிகளினால், சக்திகளினால் அக்குறிக்கோளில் வெற்றியடைய முடியவில்லை. ஆனால் முதன்மை குறிக்கோளில் தோல்வியுற்றாலும், அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அதைவிட ஒரு பெரிய குறிக்கோளில் வெற்றி பெற்றுள்ளார்கள். அதுதான் புதிய கற்பித உருவாக்கம் ***(new narrative)***. உலகிலுள்ள எந்த மதங்களும் அவர்களை போல உணர்வுகளை உருவாக்க முடியவில்லை.

சிறு தொகையான மக்கள் பலத்தைக் கொண்டு, பலம் வாய்ந்த இரண்டு இராணுவங்களை தோற்கடித்தார்கள். உலக வல்லுனர்களெல்லாம் பயிற்சி கொடுத்தும் முடியவில்லை. இதில்தான் அவர்களின் உணர்வு பலத்தை பார்க்கவேண்டும். இவை அனைத்தையும் அவர்கள் மத சார்பற்ற கற்பிதங்களால் செய்ய முடிந்திருக்கிறது. இறுதி யுத்தத்தில் அவர்கள் ஒரு நல்ல வரலாற்றை விட்டுச்செல்லவேண்டும் என்று உறுதியாக செயல்பட்டிருக்கிறார்கள் என்று ஆய்வாளர் பரணி கிருஷ்ணரஜனி கருதுகிறார். வரலாற்றுக் கற்பிதங்கள்தான் ஒரு சமூகத்தின் இருப்புக்கான ஆயுதம். அதன் முலமே அரசியலும் நடைபெறுகிறது, அதன் வழியேதான் சமூக மறுசீரமைப்புகளும் நடக்கின்றன.


புலிகள் தங்கள் அழிவிலும் யாருக்கும் கிடைக்காத ஒரு நிகரில்லா ஆயுதத்தை, ஒரு வரலாற்றுக் கற்பிதத்தை ***(historical narrative)*** உருவாக்கி வைத்து விட்டு போயிருக்கிறார்கள். அவர்களும் அந்த ஆயுதத்தின் அங்கமாகி விட்டார்கள். மற்ற இனங்களுக்கு புனைவுகளால் ஆன கற்பிதங்களே உள்ளன, உண்மையான கற்பிதங்கள் இல்லை. ஆனால் புலிகள் ஒரு உண்மையான, உணர்வுகளில் மற்ற அனைத்து கற்பிதங்களையும் விட பலமான, ஒரு முன்னேற்றகரமான, புரட்சிகரமான, மத சார்பற்ற, 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான கற்பிதத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இதுதான் அவர்களின் மாபெரும் சாதனை, மாபெரும் கொடை.

இது அவர்களின் தலையாய குறிக்கோளான ஈழ நாட்டையும் விட சாதனையில் பெரிது. ஈழமோ தமிழகமோ எதிர்கால உலக சூடேற்றத்தில் அழிவதற்கு வாய்ப்பிருக்கிறது. நிலத்தின் வெற்றி தோல்வி நிரந்தரமல்ல. ஆனால் கற்பிதங்களின் மாற்றம் நிரந்தரமானது. அவர்களின் கற்பிதம் காலம் உள்ளவரை தமிழினத்தைக் காக்கும் வல்லமை கொண்டது.

ஓர் இனத்தின் வலிமை என்பது அதன் எண்ணிக்கையிலோ, எல்லையிலோ இல்லை; அதன் கற்பிதத்தில்தான் உள்ளது. குரங்குக்கும் மனிதனுக்கும் உள்ள மரபணு வேறுபாடு வெறும் 4% தான், ஆனால் நமது ஆற்றலுடன் குரங்கை ஒப்பிட முடியாது. அதுபோலத்தான் புலிகளின் கற்பிதங்களும். அதை உள்வாங்கிய தமிழ்ச்சமூகத்தின் ஆற்றலும் அதைப் போலத்தான் பலமடங்கு அதிகமாக இருக்கும். அதை அவர்கள் ஏற்கனவே உலகறிய நிரூபித்திருக்கிறார்கள். நமது எதிரிகள் 2000 ஆண்டுகள் பழமைவாய்ந்த அறுந்துபோன இந்துத்வா, மகாவம்ச கற்பிதங்களைக் கொண்டு நம்மை அழிக்க நினைக்கிறார்கள்.

ஆனால் புலிகள் உருவாக்கி வைத்துள்ள கற்பிதங்கள் முன்னால் இவை சுக்குநூறாக நொறுங்கும். இக்கற்பித்ததைக் கொண்டு இழந்ததை மட்டும் நாம் மீட்கப் போவதில்லை. தமிழ்ச்சமூகத்தின் சாதி பாகுபாடுகளை ஒழித்து, மறுசீரமைத்து, உலகில் அனைத்து துறைகளிலும் மாபெரும் சாதனைகள் நிகழ்த்துவோம். அதற்கான வலிமை அக்கற்பிதங்களுக்கு உண்டு.

இதை ஏற்கனவே புலிகள் போர்த் துறையில் செய்து காட்டிவிட்டார்கள். நாம் மற்ற துறைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதற்கு



அவர்களின் கற்பிதங்கள் அடிப்படையாக அமையும். சப்பான் எவ்வாறு மறுசீரமைப்பு செய்து சிறப்படைந்தார்களோ, அதைவிட நம்மால் சிறப்பாக செய்வதற்கேற்ற கற்பிதங்கள் நமக்கு கிடைத்துள்ளன. பிரபாகரன் அவர்கள் வரலாற்றின் திறனை நன்றாக அறிந்தவர்:

"இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள். இந்த வரலாற்றின் படைப்பாக எமது தேசிய மண் ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம். "

பிரபாகரன் அவர்கள் கூறியதில் முதல் பாகம் வெற்றிகரமாக முடிந்தது. இரண்டாவது பாகம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

புலிகளின் கற்பிதங்களின் வலிமை எதிரிகளுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் புலிகளின் வரலாற்றை மறைக்க முழு மூச்சில் செயல் படுகிறார்கள். அவர்களின் கல்லறைகளை இடித்தார்கள், போரில் அழியாத பதுங்கு கட்டிடங்களைத் வெடி வைத்து தகர்த்தார்கள், தலைவர்களின் உடல்களை மறைத்தார்கள், ஐயா நெடுமாறனின் நூலை எரிக்க நீதி மன்றம் உத்தர விடுகிறது. புலிகள் பற்றிய திரைப் படங்களுக்கு தடை இடுகிறது. அவர்கள் அஞ்சுவது புலிகளின் வரலாறு என்ற மாபெரும் ஆயுதத்திற்குத்தான்.

அதற்கு முன் அவர்களது இந்துத்வா மகாவம்ச கட்டுக்கதைகள் அப்பளமாக நொறுங்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். புலிகளின் வரலாற்றை மறைக்காமல் தமிழரை அழிக்க முடியாது. ஒரு நாட்டின் ஆன்மா என்பது போரின் மூலமே உருவாகிறது என்கிறார் புகழ்பெற்ற தத்துவமேதை ஏகல் ***(Hegel)***

***"Every nation that wishes to emerge into existence must assert its individuality or soul by entering the stage of History, that is to say, by fighting other nations."***

ஈழப்போரின் அழிவு என்பது தமிழர்தேசத்தின் ஆன்மாவின் பிறப்பு, நமது வரலாற்று கற்பிதங்களின் பிறப்பு. அந்த ஆன்மாவை புலிகளின் வரலாற்றுக் கற்பிதங்கள் மூலம் ஒவ்வொருவரிடமும் கொண்டு போய் சேர்ப்பது நாம் செய்யவேண்டிய முக்கிய செயல்பாடு. ஒவ்வொரு வீட்டிலும் மாவீரர் நாள்



கொண்டாடப்படும் நாள் வரும்பொழுது, தமிழின விடிவு வெகு தூரத்தில் இருக்கப் போவதில்லை.

அது ஒரு புதிய தமிழ்ச்சமூகத்தை, நாம் எண்ணிக்கூட பார்க்க முடியாத கனவுதேசத்தைப் படைக்கும். அதுதான் வரலாற்றுக் கற்பிதங்கள் மூலம் வரும் உணர்வுகளின் பலம். இன்று தமிழ்த் தேசிய அரசியலை இயக்குபவர்களுக்கு உந்து சக்தியாக இருப்பதும் அவர்கள் உள்வாங்கிய புலிகளின் வரலாற்றுக் கற்பிதங்கள்தான். பகுத்தறிவை மட்டும் கொண்டு மக்களை எழுப்பிவிடலாம் என்று நினைத்தால், தோல்விதான் மிஞ்சும். மனிதனின் மூளை உணர்வுகளுக்கே செவி மடுக்கும். புலிகளின் வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடமிது.

நீண்ட காலமாக நாம் விரும்பும் ஒரு நல்ல பலமான சமூகத்தை அமைப்பதில் நாம் தோற்றுப் போவதற்கு ஒரு முக்கிய காரணமாக நான் கருதுவது தமிழர்களுக்கு என்று மக்களை உணர்வுகளால் பிணைக்கும் ஒரு கற்பிதம் இல்லை என்பதுதான். புலிகள் போராட்டத்தை ஆரம்பிக்கும்பொழுது அவர்களுக்கும் இல்லை. இந்தக் கற்பிதத்தின் தேவையை மறைமலை அடிகள்போன்ற அறிவுசீவிகள் நன்கு உணர்ந்திருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு அவ்வாறான கற்பிதங்கள் வரலாற்றில் கிடைக்க வில்லை. அடிகள் தமிழரின் பண்டைய வரலாற்றை எழுதினார், தமிழர் மதம் என்று சைவ மதத்தை முன்மொழிந்தார். ஆனால் இவை எவற்றுக்கும் மக்களை உணர்வுப் பூர்வமாகப் பிணைக்கும் திறன் இல்லை. மேலும் மதம் நம்மைப் பின்னோக்கி இழுத்துச் செல்வது, காலத்திற்கு ஒவ்வாதது. இந்த கற்பிதத்தின் தேவையை ஈழப்போர் பூர்த்தி மட்டும் செய்யாமல், அனைத்திலும் சிறப்பான கற்பித்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.


எதிர்காலத்தை பாதுகாக்க....!
வருமானக் காப்புறுதி
வாகனக் காப்புறுதி
மருத்துவக் காப்புறுதி
சேமிப்புக் காப்புறுதி
வீட்டுக் காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
வீட்டுக்கடன்
தனிப்பட்ட கடன்
Srithas Murugapathamarajah
00491788482965
EINER FÜR ALLE,
ALLE FÜR EINEN

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

Sehr Schnelle Lieferung!
Hauslieferungen
Vor-Ort Installationen
Netzwerklösungen für Firmen
Reparaturen aller Marken!

**iPhone Reparaturen**
www.iphonefan.ch

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

# ஏழு என்னும் ஒரு மந்திர இலக்கம்







**அப்துல் ஜாபார்,** இந்தியா

தமிழக மாநில ஆளும் கட்சி அ.தி.மு.க. மத்தியில் ஆளும் கட்சி பா.ஜ.க.. டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி, விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம். டாக்டர் கிருஷ்ண சுவாமியின் புதிய தமிழகம் ஜீ.கே. வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் எல்லாருமாகச் சேர்ந்து ஓர் “அவியல்” கூட்டணியை அமைத்து இருக்கிறார்கள். அத்தனை தொகுதிகளையும் நாங்கள் தான் அள்ளிக் கொண்டு போவோம் என்கிற சவடால்கள் வேறு. ஆனால் உற்றுப் பார்த்தால் உள்ளூர நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மணத்து அறிவது கடினமான காரியம் ஒன்றுமல்ல.

நட்ட நடு நிசியில் இடுகாடு வழியாகச் செல்பவன் உரத்துக் பாடிக் கொண்டே செல்வான். அது ரசனையால் அல்ல - பயத்தினால் !!!. ஏறக்குறைய அதிமுக கூட்டணியின் நிலையும் இதுதான். என்னதான் ஜம்பம் அடித்தாலும் சட்டமன்ற இடைத் தேர்தலில் ஆகக்குறைந்தது ஏழு தொகுதிகளையாவது கைப்பற்றா விட்டால் மூட்டை முடிச்சு, பண்ட பாத்திரங்களுடன் பரதேசம் போக வேண்டியது தான். வெல்லுமா? - வெல்ல முடியுமா? என்பது எளிதில் விடை கிடைக்காத கேள்வியாகவே இருக்கிறது.

கருத்துக் கணிப்புகள் - உளவுத்துறை அறிக்கை ஆகியவை அரசுக்கு சாதகமாகவே இல்லை. எதிராக இருக்கின்றன என்று கூடச் சொல்லலாம் *ANTI INCUMBANCY FACTOR* (அரசுக்கு எதிரான மனோ நிலை ஒரு பக்கம் இருக்கட்டும். ஊழல் - ஊதாரித்தனம், வருமானம் எதுவுமில்லை, விழா - கொண்டாட்டம் -கோலாகலம் என்று அநாவசியச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. பாஜகவின் கோலுக்கு ஆடும் குரங்குகள் போல் அமைச்சர் பெருமக்கள் மாறிவிட்டது போன்ற விஷயங்கள் எல்லாமே இன்று ஒவ்வொன்றாக தலைதுக்கி வருகின்றன

ஓர் உதாரணம் எம்.ஜி.ஆருக்கு மெரினாவின் ஒரு பிரம்மாண்டமான நினைவகம் இருக்கிறது. அதன் பக்கத்திலேயே ஒரு நினைவு வளைவு தேவையா? செலவு ஒன்றும் அதிகமில்லை வெறும் 52 கோடி ரூபாய்தான். 4 லட்சம் கோடி கடன் இருக்கிறது, வருமானம் என்று


வரியை விட்டால் வேறு வழியில்லை என்றாலும் பாழ்ச் செலவுகளுக்கு ஒன்றும் குறைச்சலில்லை.

திமுகவுக்கு எதிரான, ஏன், தங்களுக்கே எதிரான தோல்வி பயம் இன்னும் நீங்காத நிலையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் அதிமுகவுக்கு எதிராக விஸ்வரூம் எடுத்துள்ளார். முன்பு அவரை பத்தோடு பதினொன்று என்று கணக்குப் போட்டவர்கள். ஆனால் இப்போது அவர் தமிழக அரசியலில் ஒரு "மாய" சக்தி " *X* " *factor* என்பதை ஒப்புக் கொள்ளவே செய்கிறார்கள்.

பாஜகவின் தேர்தல் பிரச்சாரம் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கும் தோல்வி பற்றிய உறுத்தல் இருக்கவே செய்கிறது. மோடி இரண்டு மூன்று முறை வந்து போய் விட்டார். ஏனைய பிரமுகர்களும் தொடரத் தொடர வந்துகொண்டே இருக்கிறார்கள். ஒரு விஷயம் கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. பாஜகவினர் அனைவருமே ராகுல் காந்தியை பிடி பிடியென்று பிடிப்பவர்கள், திமுகவோடு அதிகம் உரசுவதில்லை. சற்று மேம்போக்காகவே விட்டு விடுகிறார்கள்.

ஓர் அதி புத்திசாலியான நிருபர் கண்டுபிடித்த காரணம். நாளை பொதுத்தேர்தலுக்குப் பின் அறுதிப் பெரும்பான்மை ***ABDOLUTE MAJORITY*** கிடைக்காத பட்சத்தில் எண்ணிக்கையின் தேவைக்காக திமுகவை வளைத்துப் போட பாஜக முயலும் என்பதுதான் அந்த கண்டு பிடிப்பு.






அத்தகைய ஒரு நிலையை அதிமுக சகித்துக்கொள்ளுமா? அல்லது அடங்கியே போய் விடுவார்களா? அதிமுக முகத்தில் இதன் மூலம் கரி பூச திமுக முயலலாம். அப்படி முயன்றால், அது தங்கள் முகத்திலும் கரி பூசிக் கொள்வது போலாகாதா? என்ற கேள்வியும் சேர்ந்தே எழும். அதற்கு ***LOVE and WAR EVERYTHING is FAIR*** என்கிற ஒரு பதில் ஆயத்தமாக இருப்பது அரசியல் வாதிகளுக்குத் தெரியாதா என்ன? மத சார்பின்மை பிரச்சாரம், வாக்கு வங்கியை குறி வைத்துத்தானே தவிர, வேறு எதற்கும் அல்ல. தேர்தல் முடிந்ததும் அடுத்து என்னவென்று ஆலோசிப்பது தான் புத்திசாலித்தனம் என்று சொல்வார்கள்.

லோக் சபா அமைச்சு அமைக்கிற விஷயத்தில் பாஜக பழைய சங்கதிகளை மறந்து விட்டு, திமுக - அதிமுக அல்லது இரு கட்சிகளையுமே நாடலாம். சட்ட மன்ற இடைத்தேர்தலில் தினகரன் கட்சி கணிசமான இடங்களைப் பெற்றால் அரசு அமைக்க அவர் உதவியையும் கூட நாடலாம். இத்தனைக்கும் பிறகு அவருக்கான விலை மலிவானதாக இருக்காது. ஒரே ஒரு விலை தான் மாநில முதல்வர் பதவி! நடக்குமா? இது தமிழ் நாடு இதுவும் நடக்கும் இதற்கப்பாலும் நடக்கும்.

நிறைவு.

AKM

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

# மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

## தமிழனின் வரலாற்றில் மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது









உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

"விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

வண்ணை தெய்வம்

# தமிழ் அறிஞர்கள் 15

"தமிழ்க் கங்கை" "செவாலியர்"

# அமுதுப் புலவர்



வாசகர்களுக்கு வணக்கம்.

மண்வாசனைப் பகுதியில் அண்மைக் காலமாக தமிழ் அறிஞர்கள் பலரின் வாழ்க்கை வரலாறுகளை நினைவுபடுத்தி வந்தேன். அவையெல்லாம் நான் அவர்களைப் பற்றிய புத்தகங்களைப் படித்து... இணையத்தில் தேடி.... இலக்கிய நண்பர்களிடம் கேட்டு, அறிந்து எழுதியவை. இப்பொழுது அமுதுப் புலவரைப் பற்றி நான் எழுதுவது, அவரோடு பழகியதன் மூலமாக அறிந்து தெரிந்து கொண்டவைகள்.

அமுது ஐயா அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் அமரத்துவமான கலைஞர் "கலைமாமணி" யேசுரத்தினம் ஐயா அவர்கள்தான்;. இவரது "முகத்தார் வீட்டுப் பொங்கல்"; நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்குவதற்காக பிரான்ஸ் வந்திருந்தார். அவ்விழாவில் நான் வரவேற்புரையை கவிதையில் நிகழ்த்தினேன். அதன் மூலமாக அறிமுகமான நாங்கள், பின்னர் அவருடைய அடுப்படிக்குள் நானும், எங்கள் வீட்டு அடுப்படிக்குள் அவரும் செல்லுமளவிற்கு நெருக்கமானவர்களாகிக் கொண்டோம்!. எனது உள்ளத்தில் இடம் பிடித்து, மௌனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் சிலரில் அமுது ஐயாவும் ஒருவர்.

இவர் எழுதிய "இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்" என்ற புத்தகத்தில் என்னைப் பற்றி எழுதும் போது "இவர் எப்போது எனது வீட்டிற்கு வந்தாலும் எனது நித்திரை யன்னலூடாக மறைந்து விடும்! இரவிரவாக இலக்கிய இரசனையே இடம்பெறும்." எனக் குறிப்பிட்டிருப்பது, மிகைப்படுத்தப் பட்டதல்ல! அப்படியான பல இரவுகளில் இடம்பெற்ற உரையாடல்களின் மூலமாகவே அமுது என்ற இந்த தமிழ்க் கடலைப் பற்றி நான் அறிந்து கொள்ளவும், தெரிந்து கொள்ளவும் முடிந்தது. அந்த நினைவுகளோடு இந்தக் கட்டுரையை எழுதுகின்றேன்.

பிறந்தது "தமிழ் தூது" தணிநாயகம் அடிகளார் பிறந்த பசுந்தீவு என்று மக்களால் புகழப்படும் நெடுந்தீவாகும்! பெற்றோர் இட்ட பெயர் அடைக்கல முத்து. ஆனாலும், தனது புகுந்த வீடான இளவாலை என்னும் ஊரின் பெயரையும், அடைக்கலமுத்து என்னும் தனது பெயரில் உள்ள அ.மு.து என்ற

எழுத்துகளையும் கோர்த்து "இளவாலை அமுது" என்னும் புனை பெயரை உருவாக்கி, தனது எழுத்துகளுக்குத் தாயாக அந்தப் பெயரையே வைக்க, காலப்போக்கில் அதுவே அவருக்கு நிரந்தர முகவரியாகிவிட்டது.

தனது பத்தொன்பதாவது வயதிலேயே தராதரம் பெற்ற ஆசிரியராக கற்பித்தல் பணியில் காலடி எடுத்து வைத்தவர், தொடர்ந்து கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையிலும், பேராதனை பல்கலைக் கழகத்திலும் படித்து பட்டம் பெற்றார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக யாழ் மாவட்டத்தின் பல பாடசாலைகளில் சேவையாற்றிய பின்னர், இளவாலையில் அதிபராக கடமையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றார்.

இவருக்கு தமிழ் இலக்கண, இலக்கியங்களை கற்க வேண்டும் என்னும் அவா ஏற்பட்டதும், யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் "பண்டிதமணி" சி.கணபதிப் பிள்ளை அவர்களினால் நடத்தப்பட்ட காவியப் பாடசாலையிலும், யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையிலும் அங்கு தமிழ் வித்துவான்களாக இருந்த பண்டிதமணி, மற்றும் "வித்துவ சிரோமணி" ந.சுப்பையா பிள்ளை, வித்துவான் வேந்தனார், "புலவர்மணி" இளமுருகனார், வித்துவான் கே.கே.நடராஜர் ஆகியோரிடமும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாக இருந்த வித்தியானந்தன், செல்வநாயகம், சதாசிவம் ஆகியோரிடமெல்லாம் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாக கற்றவர்.

அமுதுப் புலவர் என்று பலராலும் பண்புடன் அன்பாக அழைக்கப்படும் இவர், தமது காந்தப் பேச்சினாலும், கருணையான பார்வையினாலும், வசீகரமான புன் சிரிப்பினாலும் எல்லோர் மனதிலும் இலகுவாக இடம் பிடித்து விடுவார். பல சமயங்களில் மிகவும் கடுமையான போக்கு கொண்டவர்களையும் மேற்சொன்ன



இவரது இயல்புகள் மனமாற்றமடையச் செய்ததுண்டு!.

இவரது பேச்சைப் போலவே எழுத்தும் மிக எளிமையானவை! தனது பதினேழாவது வயதில் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்த இவர், இலங்கையின் பிரபல பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், பாதுகாவலன் ஆகியனவற்றிற்கு செய்தியாளராகவும், சிறப்புக் கட்டுரையாளராகவும் இருந்துள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட "இளங்கதிர்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்துள்ளார். இதனால் இவரது ஆக்கங்கள் பரவலாக சகலரையும் சென்றடையும் வாய்ப்புகளைப் பெற்றது.

ஈழத்தின் சிறந்த மரபுக் கவிஞர்களில் அமுது ஐயாவும் ஒருவராவார். மரபு நெறி பிறழாது இவர் எழுதிய கவிதைகள் காலம் கடந்தும் நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தவை. பொதுவான மரபு வழிக் கவிஞர்களுக்கும் இவருக்கும் இடையே வேறுபாடுகள் பல உண்டு. சமூக அக்கறையுடன் அன்றாட அரசியல் நடப்புக்களையும், நகைச்சுவை உணர்வுடன் நாட்டுக்காக சுட்டிக்காடுவதில் வல்லவரராவார்! பாமரனும் வாய் ருசித்துப் படிக்கும் வண்ணம் மிக எளிமையான தமிழில் இவர் எழுதும் கவிதைகள் அனைத்தும் கற்கண்டு போன்றவை!

எனது மகனின் திருமணத்திற்கு இவர் எழுதிய வாழ்த்துக் கவிதைகளில் என்னைப் பற்றி எழுதிய சில வரிகளை இங்கு இரைமீட்டிப் பார்க்கின்றேன்.

**நேசத் தமிழ்த்தாயின் நெஞ்சில் இடம்பெற்ற**

**பாசக் கலைஞர்களை பல ஆண்டாய் ஆராய்ந்து**

**முத்தமிழில் தேர்ந்த முன்னூறு கலைஞர்களை**

**இத்தலத்தில் நூலாய் எழுதிவைத்த வால்மீகி**

**மண்ணில் பிறந்த பயன் கண்ணால் கண்டுவிட்டான்**

**எண்ணத்தில் நாவினிலே என்றும் மிதக்கின்ற**

**வண்ணை தெய்வமென்ற வரலாற்று நாயகனார்**

**பேச்சில் எழுத்தில் பிறர் போற்றும் தமிழ்ப் பணியில்**

**காச்சிய பாலைப்போல் கலந்து சிறந்த அன்பன்**

**கட்டுரைகள் தீட்டிக் கவிதை பல புனைந்து**

**தொட்டாற் சுவைக்கும் மட்டில்லா நூல் எழுதி**

**கற்றோர் கருத்துரைக்கும் பத்திரிகை ஆசானாய்**

**வெற்றிலை,போல் பார்த்தோர் விரும்பி வரவேற்க**

**ஊடகத்தின் கவியரங்கில் ஒப்பற்ற தலைவனென**

**நாடகத்தில் பெயர் பெற்றான் நாம் போற்றும்**

**வண்ணை, மணி...**

இப்படியாக அவர் எழுதிய கவிதையின் பிரதிய என் படுக்கையறையின் தலைமாட்டில் பத்திரப் படுத்தி வைத்துள்ளேன்.

நெஞ்சே நினை, அமுதுவின் கவிதைகள்,





வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

(மூன்று பதிப்புகளைக் கண்டது) இவ்வழி சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள், (வைத்திய நூல்) அன்பின் கங்கை அன்னை திரேசா, (மூன்று பதிப்புகள்) மடுமாதா காவியம், புனித அன்னம்மாள் ஆலய வரலாறு, இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் ஆகிய நூல்களை வெளியிட்ட இவர் 2008ம் ஆண்டில் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆயிரத்து இருநூறு பக்கங்களில் ஒரே புத்தகமாகத் தொகுத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவருக்குக் கிடைத்த பட்டங்களை பதிவு செய்வதற்கு தனியாக ஒரு பக்கம் வேண்டும்! சொல்லின் செல்வன், புலவர் மாமணி, முப்பணி வேந்தன், தமிழ்க் கங்கை, ஈழத்துக் கம்பன் இப்படியாக இருபதிற்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்ற பெருமைக்குரியவர்.

தமிழ் மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றிற்கு ஆற்றிய தொண்டிற்காக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் கௌரவ “கலாநிதி” பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கின்றது. நூறு மக்களின் தலைவரான பாப்பரசரால் “செவாலியர்” பட்டமளித்து கௌரவிக்கப் பட்டுள்ளார்.

கனடா ரொறன்ரோவில் தமிழர் தகவல் பத்திரிகையின் சார்பில் “அறிஞர் திலகம்” என்னும் பட்டம் கனடா எம்.பி திருவாளர் கணம் யாக் லெயிட்டன் அவர்களால் வழங்கப்பட்டது. இப்படியாக இந்தப் பட்டியல் மிக நீளமானது.

அமுது ஐயா அவர்களின் குடும்பம் மிகப் பெரியது! இவருடைய துணைவியார் திருமதி திரேசம்மா அவர்களும் ஓர் ஆசிரியர். இந்தத் தம்பதிகளுக்கு பத்துப் பிள்ளைகள். அனைவரும் இங்கிலாந்திலும், கனடாவிலும் வாழ்கின்றார்கள்.

“இவன் தந்தை என்நோற்றான் கொல்” என்னும் சொல்லுக்கு இலக்கணமாக இவர்களின் புதல்வர்களில் ஒருவரான வணபிதா ஜோப் சந்திரகாந்தன் அவர்கள் குருத்துவத் தந்தையாக இருக்கின்றார் என்பது சிறப்பு!

தாய் மண்ணான இளவாலையை விட்டு இடம்பெயர்ந்து, இருபது ஆண்டுகளுக்குப்பின் இவரது மனைவியார் திரேசம்மா இலண்டனில் காலமானபோதும், அவரது இறுதி விருப்பப்படியே அவரது பூதவுடல் பிள்ளைகள் இளவாலையுள்ள இவர்களது “அன்பரங்கம்” என்னும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, சகல மரியாதைகளுடனும் தாய் மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

மனைவியின் மறைவையொட்டி இவர் பாடிய இரங்கற்பாவானது படிப்பவர்கள் இதயங்களைப் பிழிந்து, இரத்தத்தை கசிய வைப்பதாய் இருந்தது! அந்த இரங்கற்பாவில் இருந்து சில பந்திகள்.

**வாழை பலா மாமரங்கள் வளம் சொரியும் இளவாலை**
**நாளெல்லாம் செபதளங்கள் நடக்கும் திருக்கோயில்**
**கற்றோர் குவிந்திருக்கும் கரைகாணாக் கல்விநிதி**
**சிற்றாறு அள்ளிவந்த முதத்மிழர் சந்நிதியில்**
**பிறந்த திரேசம்மாவே பிரிந்தனையோ இவ்வுலகைவிட்டு!**
**இளையோர்க்குத் தமிழ் மொழியில் ஏடுகளை விரித்து வைத்து**
**மழை பொழிந்த மேகம் ஒன்று வான் நோக்கிச் சென்றதம்மா**
**முத்துக்கள் பத்லித்த மோனத் திருவுருவம் - எங்கள்**
**சித்தம் கலந்திடவே தேவுலகம் சென்றதம்மா**




# DORTMUND மாநகரத்திலே
# தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும்
# உணவுப் பொருட்களை மொத்தமாக
# பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex



வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net



கோயில் மணியடிக்க ஓடும் நதியாகி
கடலில் கலந்துவிட்ட கண்மணியே போனாயோ?
உடலைத் திரியாக்கி உள்ளத்தை நெய்யாக்கி
கடமை புரிந்திட்ட கைவண்ணம் யாரறிவார்?
திங்கள் முகத்தில் திருவருளைக் கொண்டவளே
செவ்வாய் இதழில் சிரிப்பேந்தும் திருக்குறளே
புலலும் தலைவணங்க மெல்ல நடந்தவளே
எல்லார்க்கும் பண்புகளின் ஈரம் தெளித்தவளே
வானம் வெடித்து புயலே அழுதாலும்
ஞானபரன் அடிமறவா தேன்கனியும் பூமகளே
அன்பரங்கம் என்ற பெயர் அமைந்த உன் இல்லத்தில்
பொன் ஒளியின் தீபத்தைபகலிரவாய் ஏற்றிவைத்தாய்
எப்பொழுதும் கணவனுக்கும் இனிய மக்களுக்கும்
நற்பணிகள் செய்திட்ட சாராளே மல்லிகையே
அன்பின் திருவுருவெ அமைதிக்கோர் ஆலயமே
மங்கை நல்லாள் நீ எங்கள் தங்க நிறக் கோபுரமே
சித்தம் கலங்காமல் நித்திரையும் கொள்ளாமல்
புத்திரரை நீர் காத்த புதுமை ஒரு காவியமே...

இப்படியாக நீண்டுகொண்டு போகும் அந்த அஞ்சலிக் கவிதையை கேட்டால் கல்லும் கரைந்துருகும்!

பண்பு, வரவேற்பு, உபசரிப்பு, மரியாதை போன்ற பூஞ்செடிகளுக்கு நீர் வார்த்து வளர்த்த "தமிழ்க் கங்கை" "செவாலியர்" "வித்துவான்" அமுதுப்புலவர் அவர்கள் துணைவியாரைப் பிரிந்த சில வருடங்களிலேயே மண்ணுலக வாழ்வை விட்டு அமரத்துவமடைந்து விட்டார்! இவரது பிரியாவிடையில் இலண்டனில் ஒன்றுகூடிய இலக்கிய இதயங்கள் கண்ணீரால் கரைந்துருகியது மறக்க முடியாதது!

அமுது என்ற இலக்கிய இமயம் மறைந்து போனது என்பதை அவரின் இலக்கிய ரசிகர்களால் நம்ப முடியவில்லை! ஆம்! அவர் படைத்த இலக்கியங்கள் மூலமாக இன்னமும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்.

(மண்வாசனை நிறைவுற்றது.)

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக் கடை

ASI Boucherie
PARIS - FRANCE

வாடிக்கையாளர்கள் அதிகம் ஆனதால்
தினமும் புதிய இறைச்சிகள்!
தமிழ்வாசம் வீசும் ஐரோப்பிய
இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக் கடையின்
இறைச்சிக் கறி வாசம்

அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி
வகைகளே விற்கப்படுகின்றது

ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்
சுவையான இறைச்சி உண்பதற்காக ஆசி இறைச்சிக் கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்

இது எப்படி சாத்திமாகின்றது?

தரமான இறைச்சியே விற்கப்படுவதால்
வாடிக்கையாளர்களோ அதிகம்

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

ஆடு முழுதாகவோ
அல்லது அரையாகவோ
கிலோ 4,50€



தினமும் ஆட்டுப்பங்கு

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக்
கேட்டுப் பெறவும்

# PALAZIO

EVENTS



உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களை
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் கொண்ட ஓர் அழகிய மண்டபம்.

**0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத் தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.**

## மேலும் எம்மிடம்....

மாலைகள், ஐயர், தவில் – நாதஸ்வரக் கச்சேரி, போட்டோ – வீடியோ,
பாட்டுக் கச்சேரி, நடனம், தங்கு விடுதி,
மணமகள் அலங்காரம், மேடை அலங்காரம், சொகுசு வாகன வசதி,
Limousine Car மற்றும்
பல தேவைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

+ (49) 1525 3961138 Kasinostr. 25 |42103 Wuppertal



# உளம்

## திறக்கும் உண்மைகள்



"உளம் திறக்கும் உண்மைகள்...!" என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### குறி!..

குறிப்பு, சாதி, சமயம்
ஊர், நிறம், பணம்
பார்த்துத்தான் கலியாணம்
இன்றும் குறியாய் நம்மவர்!...

### மாற்றம்!..

தாலியில் பாரிய மாற்றம்
மஞ்சளில் இல்லை தாலிக்கொடியின்
பவுணின் நிறையில்தான்
மா பெரும் மாற்றம்!...

### மகள்!..


பிச்சை எடுக்கும் தந்தை
தீராத நோயினால் தாய்
வறுமையைப் போக்கிட
காமுகருக்கு இரையாகும் மகள்!..

### மந்திரம்!..

மதமும், புராணமும், கலாச்சாரமும்,
கட்டுப்பாடும், கட்டளைகளும்
பெண்ணைத் தலை நிமிரவிடாமல்
கூனிக்குறுக வைக்கும் மந்திரங்கள்!..

### ரோஜா!..

முரட்டுத்தனமான முட்களுக்கும்
கரடுமுரடான தண்டுகளுக்கும்
துண்டங்களுக்குமிடையில்தான்
அழகாக அமர்ந்திருக்கிறது ரோசாப்பூ...



**வ.சிவராசா,**
*யேர்மனி*

## அகர கவிக்களம்....



### வெளிவருதல்

சிப்பிக்குள்ளேயே இருந்துவிடின்
முத்தின் சிறப்பென்ன,
சிறைக்குள்ளேயே இருந்துவிடின்
வாழ்வின் பொருளென்ன..?!!!

### வீண்பழி

பம்பரம் போலே
பரபரப்பு வாழ்க்கையென்கிறார்கள்
தம்மைத்தாமே சுழற்றியவர்கள்..;
பம்பரம் தானே சுழல்வதில்லை

### வாழ்க்கை

நீங்கள் தேடுவதல்ல வாழ்க்கை;
நீங்கள் எவராலாவது தேடப்பட்டால்
அதுவே வாழ்க்கை



### வேறுபாடு

கறுப்புக்கும் வெள்ளைக்கும்
கடுகளவுகூட வேறுபாடில்லை,
ஏதோ இருப்பதால் அது கறுப்பு
எதுவுமே இல்லையென்றால்
அது வெள்ளை

பாகம்.85

அன்புச் செல்வன்

ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

# இந்தியா தமிழ் ஈழத்தை அனுமதிக்குமா? ஆதரிக்குமா ?

அசோக மன்னனின் கி.மு.3ம் நூற்றாண்டு முதலே, இலங்கையை இந்திய அரசர்களின் படையெடுப்புகள் காலத்துக்குக் காலம் இடம் பெற்ற சேதியை வரலாறு பல வகையிலும் உறுதிப் படுத்தி வந்துள்ளது. அசோகனது மகனும், மகளும் அறவழியில், அமைதி முறையில் புத்த மதத்தை எடுத்து வந்தனர் என்ற சிங்கள பௌத்த மகாவம்சம் கூறிய புனை கதையை, உண்மை வரலாறு என உலகமும், நாமும் நம்பி ஏமாந்ததை தமிழ் மக்கள் இன்னமும் ஏற்க மறுக்கும் ஏமாளித் தனம்தான் 2,500 வருடம் கடந்த இந்த 21ம் நூற்றாண்டிலும் காண்கிறோம்.

மன்னார், சிலாபம் போன்ற இடங்களில் கிடைத்த முத்துக்களுக்காக பல போர்களை நடத்தி, ஆக்கிரமித்த சேர, சோழ, அரேபிய படைகளால் எமது ஈழம் கண்ட அழிவுகள் முடியவும் இல்லை, அந்நியரின் ஆதிக்கம் இன்றும் நின்று விடவும் இல்லை. வெளிநாட்டில் இருந்து வந்து, கண்டிய அரசைக் கைப்பற்றிய தெலுங்கர்களின் ஆட்சி இன்று, ஆரிய சிங்கள பௌத்த அரசுகளாக, அதே தெலுங்கர்களின் வம்சாவளிகளின் தமிழின அழிப்புகளை நடத்தும் வரலாற்றைக் கூட அடையாளம் கண்டு கொள்ள முடியாத அடிமைகளாக, ஈழத் தமிழனின் அரசியல் தலைமைகள் சிங்களத்தின் காலடிகளில் கிடக்கின்றன.

அந்த அடிமைகளின் முதலாளிகளாக, இந்திய ஆரிய மேலாதிக்க ஆட்சியாளர்கள் உள்ளனர். அவர்களின் துணை கொண்டு தெலுங்குச் சிங்களவர்களின் பின்னால் இந்திய, அமெரிக்க, பிரித்தானிய, ஐரோப்பிய முதலாளிகளின் வளச் சுரண்டல் ஈழத் தமிழ் இனத்தின் தாயகத்தையும், பரம்பரை ஆட்சி அதிகாரத்தையும் அழிப்பதை கடந்த 10ஆண்டுகளாக கண்டு வருகிறோம்.

இப்பொழுது வெளியாகி உள்ள செய்திகள், சம்பந்தன் பிரதமர் ரணிலிடம் ஈழத்தின் போர்க் குற்ற விசாரணைபற்றி வாயே திறக்கவில்லை என உறுதிப்படுத்தி உள்ளன. தனது மக்களின் இன அழிப்பு என்கிற இந்த இமாலய நிகழ்வை, இலைச் சோற்றில் மறைத்து, தமிழின அழிப்பை மறக்கவும், மன்னிக்கவும் போதிக்கும் கயமைத் தனத்தை கற்றறிந்த சம்பந்தனின் கூட்டமைப்பு, கன கச்சிதமாக செய்து கொண்டு வருவதை, அகரம் வெளிப்படுத்தி வந்துள்ளது.


ஈழத் தமிழ் இன அழிப்பை தடுக்காமலும், கண்டிக்காமலும் வெளிப்படையாகப் பேசாமல், மழுப்பல் பேச்சுகளின் மூலம் ராஜவரோதயன் சம்பந்தன் தம்மை நம்பி வாக்களித்துப் பதவிகளை, சுக வாழ்வுகளை ஏற்படுத்திக் கொடுத்த ஈழத் தமிழ் மக்களை ஏமாற்றியும், இந்திய சிங்கள அரசுகளைக் காப்பாற்றியும், கடந்த 40 வருட கால அரசியலை செய்தார்.

உலகமே அதிர்ச்சியோடு 2009 கொடிய போரையும், அதன் போது சிங்கள இராணுவம் நடத்திய போர்க் குற்றங்களையும் சர்வதேச நீதி விசாரணைக்கு தமிழ்மக்களும் சில சர்வதேச நாடுகளும் வற்புறுத்தி வந்தும் கூட, வாயும் திறக்காமல் கால நீடிப்புகள் மூலம் கடந்த 10 வருடங்களாக இலங்கை அரசின் ஏமாற்று நாடகம் சர்வதேச அரங்கில் தொடர உதவினார். அதற்குப் பரிசாக கொழும்பில் அவருக்கு பாதுகாப்புப் பிரதேசத்தில் சகல வசதிகளையும் கொண்ட, ஆடம்பர

இல்லத்தை இலங்கை அரசு கொடுத்துள்ளது.

கீழே உள்ள வரைபடம் இலங்கை இந்திய நாடுகளுக் கிடையிலான நிலம் மற்றும் கடல் பகுதிகளின் அடியில் காணப்படும் நிலத்தடி நீர் வாயு மற்றும் பெற்றோலிய கனிமவள படுகையின் அளவீடுகளைக் குறிக்கிறது. இதனை இந்திய முதலீட்டு நிறுவனத்தின் பிரித்தானிய தலைமையகமான கெயர்ன் (CAIRN) நிறுவனத்துக்கு விற்கப்பட்டு 01.01.2007 முதல் 3 துண்டங்கள் விற்கப்பட்டு ஆய்வு நடத்த அனுமதி அளிக்கப் பட்டது என்பதை வரைபட விளக்கம் தெரிவிக்கிறது.

2007ன் பின்னர் போரின் உக்கிரத்தன்மை வன்னிப் பகுதியில் அதிகரித்து, மன்னாரில் தொடங்கி, 2009ல் முள்ளி வாயக்கால் இனப் படுகொலையில் முடியும் வரை, இந்திய மற்றும் ஐரோப்பிய அமெரிக்க அரசுகளின் பங்களிப்பில் போர் நடத்தப் பட்டதை அனைவரும் அறிவர்.




இதில் இந்திய பெற்றோலிய நிறுவனமான கெயின், (CAIRN) இந்த வளங்களைப் பெறுவதற்காகவே இந்தியா போரில் காண்பித்த மூர்க்கத் தனத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இப்பொழுது மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, தமிழரின் நிலமான காவேரி ஆற்றுப் படுகை வரையம் பரந்துள்ள இந்த வளத்தை கெயின் நிறுவனமும், மேலும் பல வெளியார் நிறுவனங்களும் அடி மாட்டு விலையில் பெறவும், அங்குள்ள தமிழ் மக்களை ஈழத் தமிழ் மக்களைப்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை
சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா?
பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா?
நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும்
எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும்
இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி
தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா?
எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான
ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப
நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் வீடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden





Rufen Sie uns an:
Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955

போன்று, நிலம் அற்றவர்களாக விரட்டும் அரசியலைச் செய்கிறது.



ஜகத்ரட்சகன்

வர வர இலங்கை மீதான இந்தியாவின் பிடி அதிகரித்து வருகிறது. காங்கேசன்துறை முகம், பலாலி விமான நிலையம் இந்தியாவின் கைகளில் போய்விட்டது என்பதை மட்டுமே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், கெழும்புத் துறைமுக நகரத்திலும், அது இறங்கு துறை ஒன்றைப் பெற்று விட்டதான செய்திகளும் வெளியாகி உள்ளன.

இப்பொழுது முன்னாள் இந்திய மத்திய அமைச்சரும், அ.தி.மு.க. அரசியல் வாதியுமான திரு.ஜகத்ரட்சகன் குடும்பத்தை முக்கிய பங்காளிகளாகவும், சிங்கப்பூரைத் தலைமையாகவும் கொண்ட 'இன்வெஸ்ற் மென்ற் வெகிக்கிள்' என்கிற நிறுவனம், இலங்கை அம்பாந் தோட்டையில் 385 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டில், பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ ஒப்பந்தம் செய்யப் படுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதி விசாரணையோ, ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானங்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் உட்பட எந்த ஒரு கடப் பாட்டையும், இலங்கை அரசு செய்யாமல், தப்பித்துக் கொள்ள இந்திய அமெரிக்க அரசுகள் சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான தமிழர் தேசியக் கூட்டமைப்பின் மூலம் செவ்வனே நடத்தி வருகின்றன.

கூட்டமைப்பின் அண்மைக் கால சாதனையான, ஜனநாயகத்தைக் காப்போம் என்ற கொட்டொலியுடன் ரணில் விக்கிரம சிங்காவின் பதவி வெறி ஆசையை எரியூட்டிக் காப்பாற்றி விட்டதாக, குளிர் காய்ந்த காட்சியை உலகம் கண்டது. இருந்த எதிர்க் கட்சித் தலைமைப் பதவியையும் பறி கொடுத்து விட்டு, "ஓடிய வண்டியும் போச்சு! ஓறணை மாடும் போச்சு..!" என்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறது.

ஆனால், முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கோ அசாத்சாலி கொழும்பிலும், எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லா கிழக்கு மாகாணத்திலும் மாகாண சபை ஆளுநர் பதவிகளைப் பெற்று, இலங்கையின் இரண்டாவது முக்கிய அரசியல் சக்தியாக முஸ்லிம் சமூகம் வளர்ந்து விட்டது.

இதனை நாம் பொறாமை உணர்வுடன் பார்க்க வில்லை அவற்றைப் பெற அவர்களுக்கு முழுத் தகுதியும் இருக்கிறது. அதனால் 'விளக்கு மாறும்




# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**







ENESAR N.S.R. என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்

**வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....**
**எமது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்**




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**



போச்சே!' என அழுகின்ற மூஞ்சூறுகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நத்தார், புத்தாண்டு வாழ்த்துகளைக் கூடத் தமிழ் மக்களுக்கு தெரிவிக்க முடியாத அளவுக்கு, ஊமைகளாய் ஆகிவிட்ட நிலைகண்டு, ஓலமிட்டு அழுவதா? அல்லது வாய் விட்டுச் சிரிப்பதா?

மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல தமது ஆதரவாளர்களை, இரகசியப் பொலிசார் கஞ்சாக் கடத்தல் குற்றச் சாட்டில் கைது செய்து விட்டனர் என வீரா வேசம் கொண்டு திரு.சுமந்திரன் பேசிவருகிறார். அவருக்கு கோப்பாயில் நவம்பர் 23ல் இடம் பெற்ற மாவீரர் நினைவுநாள் நிகழ்வை, ஒழுங்கு செய்தவர்களை புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்தினர் எனக் குற்றும் சாட்டி, தடைசெய்ய முயன்ற வழக்கில் நீதிமன்றம் புலிகளின் சின்னங்கள் பயன்படுத்துவதைத் தடைசெய்து, தீர்ப்பளித்தது என்ற விடயமே பெரிசாக இருக்க வில்லை.

ஏனென்றால் இவை எல்லாம் இலங்கை இந்திய அமெரிக்க அரசுகளின் தேவையாக நடத்தப்படும், தமிழ் மக்கள் மீதான இராணுவ சமூக அரசியல் உரிமைகள் மீதான நெருக்கடிகள்.

ரா எனப்படும் இந்திய அரசின் உளவுத்துறை மாவீரர் நாளை புலிகள் மற்றும் அரசியல் முக்கியத்துவம் அற்ற மத வழிபாட்டு நிகழ்வாக, மாவீரர் ஈழம் போன்ற பதங்களை பயன்படுத்தாத வகையில் நடத்தப்பட வேண்டும் என்பதை, நடைப்படுத்தியது என்பது தெரிய வருகிறது. இது எதிர் பார்த்த ஒன்றுதான். 2 இலட்சம் மக்களைப் படுகொலை செய்து, பல்வேறு சர்வதேசச் சட்டங்களையும் மீறிக் குற்றங்களைச் செய்த அரசுகளுக்கு என்ன புதிய ஞானோதயமா




வந்து விடப் போகிறது?

தமிழர் தொடர்பான குறிப்பாக ஈழத் தமிழர் தொடர்பாக இந்திய மத்திய அரசு, இனிமேல் தனது கொள்கையில் மாறும் என நினைத்து, அதன் பின்னால் செல்வது அப்பட்டமான இனத் துரோகம் அல்லது கடைந்தெடுத்த கயமைத்தனம். இப்பொழுது தேர்தல்கள் வருவதால் ஆறடிச் சிங்கம் மாவையாரும், வாத்தியார் சிறீதரனும் பாராளுமன்றத்தில் தமிழில் வாய் கிழியக் கத்தினாலும், சுமந்திரன் ஆங்கிலத்தில் கோட்டுச் சூட்டுப் போட்டு, கோசம் போட்டுப் பேசினாலும், தமிழர்கள் வேண்டுமானால் "ஆகா...! ஓகோ...!!" என ஆர்ப்பரிக்கலாம். சிங்களத்தில் பேசினாலே காதில் வாங்க மறுக்கிற சிங்களம், இவர்களின் தமிழ் ஆங்கில ஒப்பாரிக்கா காது கொடுக்கும்?

இந்திய மத்திய அரசு இந்தியத் தமிழ் மக்களையே வறுத் தெடுத்து வரும் நிலையில், ஈழத் தமிழருக்கா ஈவு இரக்கம் காட்டும்? நாம் சர்வதேச அரங்கில் நாடுகளின் ஆதரவைத் திரட்டினால் மட்டுமே உயிர் வாழ முடியும். உலக நாடுகளில் மக்கள் தீர்பாயங்களை ஏற்படுத்தி, அரசியல், அறிவியல் சமூகங்களின் ஆதரவுடன் எமக்கான சர்வதேச சட்ட விதிகளின் அடிப்படையில் தீர்வை நோக்கி பயணிப்பது ஒன்றுதான் எமக்கு ஏற்ற ஒரே வழி.

**(தேடல் தொடரும்)**



**கோப்பாயில் மாவீரர் நாள்**

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...





திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**என்ர பாடு ஏதோ போகுது பாருங்கோ. எனக்கு நேரம் காலம் தெரியாமல் பிரச்சனையள் காதுக்கு வாற படியால், உடல்நிலை அடிக்கடி மாறும் பாருங்கோ. திடீரெண்டு கடுப்பேறும், பதறியடிக்கும், உள்ளுக்குப் பத்தி எரியும். சில நேரம் குளிரும். உப்பிடித்தான் என்னுடைய வாழ்க்கை பாருங்கோ. காலநிலையும் என்ர உடல்நிலையும் ஒரே மாதிரித்தான் கண்டியளோ. சுத்திவர இருக்கிறதெல்லாம் சரியா இருந்தா மனிசன் ஏன் பதட்டப்படப் போறான் பாருங்கோ. ஒருவிதத்தில் பார்த்தால் சுத்தி இருக்கிறதெல்லாத்தையும் மாத்துறதும் மனிசன் தான் பாருங்கோ. எது எப்பிடி எண்டாலும் பிரச்னைக்கு மட்டும் குறைவிருக்கப் போறதில்லை கண்டியளோ.**

நான் அதிகமாக விரும்பி வாசிக்கிறது வரலாற்றுக் கதைகளைத்தான் பாருங்கோ. நேர்த்தியாக எழுதப்பட்ட வரலாற்றுக் கதைகளுக்கு ஒரு அழகு இருக்கு கண்டியளோ. அதில உண்மையும் ஆழமும் வாசிக்கும்போதே அறிஞ்சுகொள்ளலாம் பாருங்கோ. தமிழக எழுத்தாளர்களை விடவும் சிறப்பாக எழுதக்கூடிய எழுத்தாளர்களும், வரலாற்றாசிரியர்களும் எங்கட மண்ணிலே இருந்தவை கண்டியளோ. தமிழீழத்தில இருந்த பல எழுத்தாளர்களுக்கு சிறந்த வரவேற்பு இருந்ததும் அனைவருக்கும் தெரியும்.

ஆனால் பாருங்கோ 2009 இற்குப் பிறகு, வரலாற்றை நேர்த்தியாக எழுதக்கூடியவர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே இப்ப எங்கட மண்ணிலே இருக்கினம். மண்ணின் மணம் மாறாமல் எழுதக்கூடிய ஒரு தம்பியின்ர புத்தகம் அண்மையில உங்க ஒரு பக்கத்து நாட்டில வெளியிட்டு வைச்சவை கண்டியளோ. வரலாற்றுக் கதையை ஒட்டிய அந்தப் புத்தகம் வெளிவந்தது பலருக்கு மூலத்தில வலியை உண்டாக்கிப் போட்டுது பாருங்கோ. அது ஏன் எண்டு தேடினால் ஒட்டுமொத்தமான இலக்கியக் கூட்டத்தின்ர விருப்பங்களுக்கு ஏற்ற மாதிரி அந்தப் புத்தகம் வெளிவரேல்லை எண்டதுதான் காரணம் பாருங்கோ.

அந்தத் தம்பி இதுக்கு முதலும் பல புத்தகங்களை எழுதியவர் பாருங்கோ. இதுக்கு முதல் அவருக்கு இதுமாதிரி நெருக்குதல்கள் வரேல்லை பாருங்கோ. இலக்கியவாதிகளுக்கு இந்தப் புத்தகத்தின்ர தலைப்பே கொஞ்சம் கசக்க வெள்ளிக்கிட்டுட்டுது பாருங்கோ. ஏன் எண்டு பாத்தால் அதில வாற பிரதான விசயமே தமிழர்களும் தமிழீழப் போராட்டமும் தான் பாருங்கோ. அதிலையும் தானே சக்தி எண்டு நினைச்சுக்கொண்டு பினாத்துற ஒரு மாபெரும் இலக்கிய வாதிக்குப் பெரிய

LINUS media

IPTV

ஐரோப்பாவின் முன்னனி IPTVகளை வாங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

chitram 4K 4K mini ULTRA HD



நீங்கள்
வீட்டில் இருந்தபடியே
Online மூலம் எம்மிடம்
புதுப்பித்துக் கொள்ள முடியும்

மேலதீக தொடர்புக்கு... 0031 621 604 168

www.linusmedia.nl 0031 620 897 414

40+ TAMIL CHANNELS

40+ HINDI CHANNELS

10 CARTOON CHANNELS

15+ ENTERTAINMENT CHANNELS

15+ SPORTS CHANNELS

20+ MALAYALAM CHANNELS

15+ TELUGU CHANNELS

பிரச்சனை கண்டியளோ…!

கடல் கடந்து வெகுதொலைவில இருந்தாலும் அவரின்ர வெளவால்குணம் ஒரு நாளும் அவரை நேர்மையா எழுதவிடாது போல கிடக்கு. புத்தகம் எழுதியவன் நேர்மையாகச் சரியாக இருந்தாலும், அவர் வெளவால் மாதிரித் தலைகீழாத் தொங்கிக்கொண்டுதான் அதை வாசிப்பர் எண்டு நினைக்கிறன். அதில அவர் குமுறின விசயம் ஒண்டு பார்த்தன் கண்டியளோ. உந்த அளவுக்கு குமுறுறது எண்டால் ஒண்டில் அவருக்குச் சிங்கள இனத்தின்ர இரத்த சம்பந்தம் இருக்கவேணும். அல்லது அவர் சிங்களவனாகவே இருக்கவேணும் பாருங்கோ. என்னவெண்டால் பாருங்கோ “ஈழக்கோரிக்கையை வலுப்படுத்தி எழுதப்படுற கதைகள் எல்லாமே, ஒரே திசையை நோக்கிய பார்வையைக் கொண்டதாகவே இருக்கும்” எண்டு அவர் ஆழ்வார்ப்பேட்டை ஆண்டவர் கணக்கில அடிச்சுவிட்ட பதிவைப் பாத்திட்டு ஆள் மய்யத்தில சேரச் சரியான ஆள் எண்டு நினைச்சன் பாருங்கோ.

எட இடிவிழுவானே, விடுதலை எண்டுறது ஒரே திசையில நோக்கித்தானே இருக்கவேணும். உன்னை மாதிரி, பச்சை மட்டை அடிவாங்க முதல் ஒரு திசையும், அடிவாங்கினாப் பிறகு ஒரு திசையுமா இருக்கமுடியாது தானேயடாப்பா. வாயைத் திறந்தாலே வைரமுத்து கணக்காத்தான் கதைக்கிறம் எண்ட நினைப்பில திரிஞ்சா உப்பிடியெல்லாம் பேசவரும். அதில தப்பில்லை. ஆனால், கருத்து எண்ட பெயரிலே நீ வாந்தி எடுக்கிறதைப் பார்க்கச் சகிக்காமல் எத்தனையோ பேர் அமைதியா இருக்கிறாங்கள் ஏதோ தான் மட்டுமே படிச்சவன் எண்ட கணக்கில பீத்த வெளிக்கிட்டால், ஒருத்தரும் குறுக்க வந்து அந்த எண்ணத்தில மண் போடவிரும்பான். அதையே தன்னுடைய பலமாக நினைச்சுப் பீத்தினால் அதைப்பார்த்துச் சிரிக்கிறதைத் தவிர வேறொன்றறியேன் பராபரமே.

உதே இலக்கிய வகையறாவைச் சேர்ந்த ஒருத்தர். தமிழகத்தில இருந்து ஐரோப்பாவுக்கு ஓடிவந்து,ஈழத்தமிழன் எண்டு பொய் சொல்லி அகதித்தஞ்சம் கோரி குடியுரிமை பெற்ற கர்மவீரர் அவர். அவருக்கு ஈழமண் பற்றிய அறிவு சுத்த சூனியம். அதிலையும் அங்க இந்திய இராணுவம் வந்த காலத்தில உவர் எங்கையும் ஒரு மூலையில



பள்ளிப்படிப்பில இருந்திருப்பார் எண்டு நினைக்கிறேன் பாருங்கோ. அவரின்ர இலக்கியத் துழாவல் பெரிய கொடுமை பாருங்கோ. அதாவது இராணுவத்தை ஒருநாளும் பேய்கள் எண்டு ஒரு எழுத்தாளர் எழுதக்கூடாதாம். அப்ப பாருங்களன்.

தமிழ் நிலத்தை அழிச்சு, குடியைச் சின்னாபின்னமாக்கி ஊர் ஊராக அலையவிட்டவனை பேய் எண்டு எழுதாமல், உன்ர கோப்பரின்ர வாய் எண்டு எழுதுறதே..? இல்லைத் தெரியாமல் கேக்குறன். அடேய், உன்ர வாயைச் சுத்தி ஒரு மீசையை வைச்சு, ஒரு கண்ணாடியும் போட்டால். கார்ல் மாக்சு எண்டு நினைச்சுக்கொண்டு கதை விட்டுச் சீவிக்கலாம் எண்டு நினைச்சால் அது உன்ர தப்பு. எப்பயாவது நீ எங்கட சனத்தின்ர கண்ணீர்க் கதையைக் கேட்டிருக்கிறியோ.? அல்லது ஏதாவது ஒரு அவலத்தை நேரில பார்த்திருக்கிறியோ ? ,சரி அதுதான் வேண்டாம்.

இப்பவும் அந்த மண்ணிலே ஒருவேளை உணவுக்கே அல்லாடுற மனிசரைப் பார்த்திருக்கிறியோ..? வேளா வேளைக்கு மூக்குமுட்டச் சாப்பிடும், நல்ல மதுபானமும் அரசாங்கச் செலவில கிடைச்சால், கை கால் சும்மா கிடவாமல் ஏதாவது எழுதச் சொல்லும் எண்டுறது எல்லாருக்கும் தெரியும். ஆனால் உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு அலையுற எங்கட சனத்தின்ர அடிப்படை உரிமையில கை வைக்க உனக்கு ஒருத்தரும் முதுசம் எழுதித் தரேல்லை.

அட எழுதுறதுதான் எழுதுறாங்கள், ஏதாவது தங்கட வெட்டிப்பிரட்டின ஒரு வரலாற்றை எழுதலாம் தானே. அப்படி ஒண்டும் இல்லைஎண்டுறது வேற விசயம் பாருங்கோ. அதிலையும் பாருங்கோ, ஒரு தனிப்பட்ட நபரின்ர வாழ்க்கையைப் பற்றி விமர்சனம் எழுதுறதை ஒரு எழுத்தாளன் செய்யமாட்டான், ஆனால்; உந்த இலக்கிய வாதிகள் எல்லாருமே ஒரு நாளில ஒருக்காவாவது பிறரின்ர குடும்பத்தை எழுதாமல் இருந்ததா வரலாறு இல்லை கண்டியளோ.

உப்பிடியான வங்குரோத்து இலக்கியவாதிகளுக்குத்தான் உப்பிடியான பிரச்சனைகள் எழுத நேரம் கிடைக்கும். அதுபரவாயில்லை. என்னத்தையாவது எழுதித் தொலைக்கட்டும் பாருங்கோ. ஆனால், எங்கட மண்ணின்ர வரலாற்றை ஒருத்தன்

Münster மாநகரத்தில்
28 ஆண்டுகளாகத் தமிழ் மக்களின்
நன்மதிப்பினைப் பெற்ற...



TTS BROTHERS
Asien Supermarkt

வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

சமையலுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

நம்பிக்கை
நாணயம்
நேர்மை



TTS ஆசியா
சூப்பர் மார்க்கட்
0251 1365194
wolbeckerstr.27
48155 Münster

படைக்கும்போது அதுக்குள்ள வந்து நோண்டுறது, நொட்டுறது, நெட்டி முறிக்கிறது எண்டு சிலர் வருவினம். தானும் படான், தள்ளியும் படான் எண்ட மாதிரி, தங்களுக்கும் ஏதும் எழுத வராது, பிறர் எழுதுறதையும் விடுறேல்லை எண்டுற ஒரு அநியாய மனோநிலை தான் உது பாருங்கோ.

இப்ப உள்ள நிலையில, எங்கட மண்ணின்ர கதைகளைப் புதைக்க எண்டே ஒரு கூட்டம் அலையுது பாருங்கோ. அதில சிலரின்ர கூத்து என்னவெண்டால் பாருங்கோ, இருபது வருசத்துக்கு முதலே ஊரில இருந்து தப்பி ஓடி இங்க வந்து, தானும் ஏதோ போராட்டத்தில கலந்து வெட்டிப்பிரட்டின மாதிரி கதை எழுதி , அதைப் புத்தகமாக அடிச்சு, இந்தியாவில இருந்து ஒரு இராணுவ அதிகாரியையோ அல்லது ஒரு தூதுவரையோ வைச்சு அந்தப் புத்தகத்தை வெளியிட்டுப் புகழ் தேடுறது.

எட பரதேசி; நீ செவ்வாய்கிரகத்தில தான் புத்தகத்தை வெளியிட்டாலும், உன்னைப் பற்றிய உண்மை தெரிஞ்சவன் வாசிக்க மாட்டான் கண்டியோ. நீ அல்லக்கை எண்டுறது எல்லாருக்கும் தெரிஞ்சபிறகாவது நீ அமைதியா இருக்க வேணும். இல்லையெண்டால் அவமானப்படுறதைத் தவிர வேற வழியே இல்லை கண்டியோ.

இரத்தமும் சதையுமான ஒரு வரலாற்றை, ஒரு இளம் எழுத்தாளன் எழுதுறான் எண்டால், அது அவனுக்கு வருகுது, அதால எழுதுறான். அதை அவனுடைய கடமையாக நினைக்கிறான். எழுத்தாளனாக வேண்டும் எனச் சொல்லிக்கொண்டு ஒருவர் பிறப்பதில்லை. புறச்சூழ்நிலையும், ஆழ்மன எண்ணங்களுமே ஒருவனை எழுதத் தூண்டுகின்றன. அந்த இயற்கைத் தூண்டலை முறையாகப் பதித்துச் செல்பவன் மக்களால் நேசிக்கப்படுவான். அதுவே இயற்கையும் நியதியுமாகும் பாருங்கோ.

வாயைத் திறந்தா வன்மம் கொட்டுறவன் எல்லாம் எழுத்தாளன் எண்டு தனக்குத் தானே பெயர்வைக்கலாமே ஒழிய, மக்கள் ஒருநாளும் அவனை எழுத்தாளனாக ஏற்றுக்கொள்ள மாட்டினம் கண்டியளோ. ஐயோ உந்தக் கோதாரி விழுவாருக்கு என்னத்தைச் சொல்லிப் புரியவைக்குற தெண்டு விளங்கேல்லைப் பாருங்கோ.

அடேய், கொள்ளையில போவாரே, வரலாற்றைப் படைக்கிறவனை அவன் போக்கில விட்டுத் தொலையுங் கோவனடாப்பா. இல்லை எண்டால் நீங்களாவது ஏதாவது ஒரு வரலாற்றை எழுதித் தொலையுங்கோ. ஆனால்; உண்மையும் நேர்மையுமா எழுதப்படுகின்ற படைப்புகளில உங்கட வன்மத்தைக் காட்டிப் பெரியாள் ஆக நினைச்சால், அது உங்களுக்குத் தான் அழிவைத் தேடித் தரும்.

**சிந்தித்து பார்த்து செய்கையை மாற்று**

**சிறுசாய் இருக்கையில் திருத்திக்கோ - தவறு**

**சிறுசாய் இருக்கையில் திருத்திக்கோ**

**தெரிஞ்சும் தெரியாம நடந்திருந்தா**

**அது திரும்பவும் வராம பார்த்துக்கோ**

**- அப்ப வரட்டே**


ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

**R.RAGUNATHAN**
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

**T. ANBALAGAN**
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS MONEY TRANSFER · Ria · MoneyGram · TEMPO MONEY TRANSFER

**IBAN : DE55 3907 0024 0474 1153 00  BIC : DEUT DE DB 390**



ESTD 1992
Gopara Gnanam
வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்
மங்கையர் மனங் கவரும்
இந்த வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Wedding Sarees
DISCOUNT!!
Rheinische str.81,
44137 Dortmund / D
Tel. : 0231 5450 028,
Mob. : 0171 330 65 42,
0176 246 54 009

# உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கான ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



## அனைத்து வாகனத் திருத்த வேலைகளுக்குமான ஒரே இடம்

- Reifenwechsel
- Auto Diagnostik
- Karosserie
- Klimaservice
- MFK Bereitstellung
- Bremse und Stossstange
- Autoradio Montage
- Reinigung und Polieren
- Sonstige Reparaturen
- Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

பகுதி.20

- அவதானி



ஒரு நாட்டினுடைய பெரும் செல்வமே விவசாயந்தான். நவீன தொழில் நுட்பத்தில் ஒரு நாடு எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும், விவாயத்தில் வீழ்ச்சியடைந்தால் அந்த நாடு வறுமையான நாடுதான். எனவே, உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டினுடைய விவசாயத் துறை மீது தமது முக்கியமான கவனத்தைத் திருப்பும்.

ஒரு நாடு என்றால் அது பல கட்டமைப்புகளைக் கொண்டதாகவே இருக்கும். ஒவ்வொரு கட்டமைப்பையும் நலிவடையச் செய்வது அல்லது இல்லாதொழிப்பதன் மூலமே, உலகில் தன்னனை ஒரு சர்வாதிகாரியாக நிலைநாட்ட முடியும் என்பதற்கமையவே சர்வாதிகார நாடுகள், வளர்முக நாடுகள் மீது உளவு நிறுவன ஒற்றர்கள் மூலம், சீர்குலைப்பை ஏற்படுத்துகின்றன.

அமெரிக்கா பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்த போதும், அமெரிக்காவை வெளிப்படையாக கடும் போக்கில் எதிர்க்க பலநாடுகள் தயங்குகின்றன. ஒரு நாட்டினுடைய மக்கள் தொகைக்கும் அதிகமாகவே விவசாயத்திலிருந்து பெறப்படும் உணவு உற்பத்தி இருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் கலப்பையையும், மண்வெட்டியையும், பட்டையையும் விவசாயத்துக்காக பயன்படுத்திய சமூகம், காலப்போக்கில் மக்களின் உணவுத் தேவையின் அதிகரிப்பால் ஏக்கர் கணக்கில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.





உணவுத் தேவை அதிகரிக்க, அதிகரிக்க உணவு உற்பத்தியில் விழ்ச்சிக்கான சூழ்நிலையும் தோன்றியது. பயிர்களை பூச்சிகள் உண்ணத் தொடங்கின. பூச்சிகளின் பெருக்கம் கூர்ப்பு நிலையிலிருந்து வந்ததா? அல்லது ஒரு நாட்டினுடைய உணவு உற்பத்தியை வீழ்ச்சியடையச் செய்த சதியா? எனச் சந்தேக நிலை இருந்தாலும், சதி என்பதை முற்று முழுதாக நிராகரிக்க முடியாது.

அதிகரித்த விவசாயத்தினால் பயிர்களுக்கான பசளைகள் என்பது எரு குப்பை போன்றவற்றினால் ஈடுகட்ட முடியாத நிலை தோன்றியது. இக்காலச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திய உளவு நிறுவனங்கள், வெளிநாடுகளில் இருந்து வேதியல் பொருட்கள் கலந்த இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்து, பயிர்களுக்கு பசலையாகப் பயன்படுத்தினால், அதிக விளைச்சலைப் பெற முடியும் என்ற பரிந்துரையை முன் வைத்த போது, அப்பசளையின் இறக்குமதி முகவர்களாகச் செயல்பட்டவர்கள் துரிதகதியில் இயங்கத் தொடங்கினார்கள்.

இறக்குமதி செய்யப்பட்ட வேதியில் பசளையினால் பயிர்கள் அதிக விளைச்சலைக் கொடுத்தன. அதனைக் கண்டு விவசாயியும் மகிழ்ச்சியடைந்தான். வேதியல் பசளையால் மண்ணின் தன்மை, தனது இயல்புத் தன்மையை இழந்து வருகின்றது என்பதை உணர்ந்த விவசாயி, வேதியல் பசளையைப் பயன்படுத்துவதிலிருந்து அவனால் விடுபட முடியவுமில்லை. அதனை அவனால் நிராகரிக்கவும் முடியவில்லை.


MEERHAA AYURVEDA

GESUNDHEITS PRAXIS

Panchakarama Treatment Ayurvedic Beauty SPA

DR. SASHIMEERA SIVARASALINGAM

Tel. 076 426 34 44

INDIAN AYURVEDA THERAPIE



உங்கள் உடலில் ஏற்படும் வலிகள், நோக்கள் என்பவற்றிலிருந்து விடுதலை அடைந்து மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதற்கு எம்மை நாடுங்கள்

- Kopfschmerzen (Migrane)
- Depressionen
- Muskelverhärtungen
- Arthrose
- Allergie
- Diabetes
- Bluthochdruck
- Schlafstörungen
- Mudigkeit

கவலை வேண்டாம் உங்கள் மருத்துவக் காப்புறுதி ஊடாக கட்டணம் செலுத்தலாம்









meena_1882@hotmail.com www.meerhaaayurvrda.ch

KRANKENKASSE ANERKANNT

முறைப்படி ஆயுர்வேத சிகிச்சை படித்தவர்களால்தான் வைத்தியம் பார்க்கப்படுகிறது.

Kanzleistrasse 115, 8004 Zurich. Natel : 076 426 34 44

வேதியல் பசளை இடுதல் ஒரு தவிர்க்க முடியாத நிலைக்கு விவசாயியைக் கொண்டு வந்து விட்டது. இப்பசளையைப் பயன்படுத்தினால்தான் பயிர்களிலிருந்து அதிக விளைச்சலைப் பெற முடியும் என்ற நிலை நிரந்தரமாவதற்கு வேதியல் பசளையை மட்டுமே மண் உள்வாங்குமளவிற்கு மண்ணின் துணிக்கைகளில் வேதியல் பசளையின் அணுத்தன்மை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்.

மண் பழுதடைதல் என்பது ஒருவரின் உடலில் நோய்தரும் கிருமிகள் தொற்றிக் கொண்டதற்கு ஒப்பனாதாகும். உளவு நிறுவனங்களே, முகவர்கள் என்ற ஒற்றர்களுக்கூடாக, வெளிநாட்டு பசளை உற்பத்தியாளர்களாக அறிமுகமாவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு.

அதிக விளைச்சலைத் தரும் பயிர்களின் மரபணுக்கள் இயல்பான இயற்கைத் தன்மையிலிருந்து மாறுபட்டு, அவை இயற்கைப் பசளைகளை நிராகரிக்கும் அதே வேளை, வேதியல் பசளையை துரிதமாக உள்வாங்குகின்றன.

இயற்கையான மரபணுச் சிதைவினால் பாதிக்கப்படும் பயிர்கள் சேட்டமிழந்தவையாகவும், விளைச்சலைத் தரமுடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றன.

பயிர்கள் மீதும், மண்மீதும் அவற்றை அழிக்கின்ற பூச்சிகளை, வைரஸ்களை உளவு நிறுவனங்களாக செயல்படும் வெளிநாட்டு பசளை உற்பத்தியாளர்கள், அவற்றுக்காக பயன்படுத்தும் வேதியல் பசளை வழியாகவே உற்பத்தி செய்கிறார்கள்.

மண்ணின் தன்மையை நிவர்த்தி செய்கிறோம் என்றும், பயிர்களின் நோய்களை குணப்படுத்துகிறோம் என்றும் விவசாயிக்கு விற்பனை செய்யப்படும் பூச்சி மருந்துகள், இன்னொரு பயிர் நோய்களை ஏற்படுத்துகின்றன.

(தொடரும்)

BEST PRICE
Milin Impex GmbH
IM
Indische Lebernsmittel GroBhandel
வாடிக்கையாளர், நண்பர்களுக்கு எமது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்
மலிவான தரமான மளிகைப் பொருட்களின் மொத்த, சில்லறை விற்பனையாளர்
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
10:00 முதல் 18:00 மணி வரை திறந்திருக்கும்
எமது மலிவு விலைகளை அறிந்து கொள்ள....
www.milinimpex.de
Westendorf Str 41,
44287 Dortmund
Tel : 0231 459628 / 01725868366 info@milinimpex.de





# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு மாற்றீடாக இந்த உலகம் எந்த மாற்றுவழியையும் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. வெறுமனே எரிபொருள் எனப்படும் மசகு எண்ணெய் விற்பனையிலும், சீனாவின் பட்டுப்பாதை வளர்ச்சியிலும் எல்லோர் கண்களும் தீய்ந்து போய்க்கிடக்க, உலகம் மட்டும் தன்னந்தனியே சுழன்றுகொண்டிருக்கிறது. வெகுவிரைவில் ஒரு லீற்றர் பாலை விட, ஒரு லீற்றர் நஞ்சு இலகு விலையில் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம். ஒரு சராசரி மனிதனின் உணவுத்தேவையை, அந்தப்பொழுதில் மட்டும் போக்கி விட்டால் போதுமானது என்ற வகையில் நமது வாழ்வு மாறிவிட்டது.

எதையாவது அவசர அவசரமாக வாங்கி, மூடி வைத்து அவித்து உண்டுவிட்டால் போதுமானது என்பதே இன்றைய மனோநிலை. அதிலும் “பச்சைக் காய்கறிகள்” என்று கவர்ச்சியான பெயர் வேறு. இன்றைய உணவுத் தேவையின் முழுப்பங்குமே இரசாயனமின்றி இல்லை என்பது, எல்லோருக்கும் தெரிந்தால் கூட,“ ஓ..! அப்படியா!” என்று கேட்டுவிட்டு இலகுவாகக் கடந்து விடும் நிலைக்கு நாம் வந்துவிட்டோம். ஆனாலும் நின்று நிலைத்து, நிதானித்து யோசிக்க வேண்டிய ஒரு தருணத்தை, மாற்றமுடியாத நோய் நமக்குத் தந்துவிட்டுப் போய்விடும். அங்குதான் அச்சாணி இழந்த வண்டியாக நடுத்தெருவில் நின்றிருப்போம். சாதாரணமாக நம்முள் புகுந்துவிட்ட உணவுத் தயாரிப்பு முறைகளின் அபாயம் பற்றி வேறு சில ஆங்கிலக் கட்டுரைகளில் வெளிவந்த செய்திகளைத் தொகுத்து உங்களிடம் தருகிறேன். உங்களுக்கு பயனுள்ளதாயிருப்பின் மகிழ்வேன்.

நீங்கள் உணவைச் சூடாக்கும் முறை என்ன? ***Microwave oven*** என்று சொல்லப்

படுகின்ற மின் சூடாக்கிப் பெட்டியைத் தான் உபயோகிக்கிறீர்களா? அந்தப் பெட்டியில் உங்கள் உணவை இட்டு, நீங்கள் ஒருமுறை உணவு சூடாக்கும் போது 2.45 பில்லியன் அளவுக்கு அலைக் கற்றைகள் அந்தப் பெட்டியினுள் உருவாக்கப்படும். அந்த அலைக்கற்றைகள் உணவிலுள்ள நீர்த் தன்மையின் மீது செலுத்தப்படும் போது, அந்த அதிர்வுடன் கூடிய வெப்பத்தில் உணவு விரைவாகச் சூடேறும். இவ்வாறாகச் சூடேறும் தன்மையானது உணவிலுள்ள அனைத்து விதமான உயிர்ச்சத்துக்களையும் அகற்றி விடும்.

இவ்வாறு நீங்கள் சூடேற்றிய உணவு வைக்கோலுக்குச் சமம். சரி..., அதுகூடப் பரவாயில்லை என்கிறீர்களா..? இவ்வாறு சூடேற்றப்பட்ட உணவை நீங்கள் உண்டால், உங்கள் உடலின் அணுக்களில் இந்த அலைக்கற்றையின் பாதிப்புகள் சென்றடையும். சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி கான்சு கேர்டெல் *(Hans Hertel)* இந்தப் பாதிப்பை இரத்தப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தினார். அவரது 1992 ஆம் ஆண்டின் ஆராய்ச்சியில் வெளிப்பட்ட மேலதிக விடயங்களை நோக்குங்கள். மின்னலைக் கற்றைகள் மூலம் சூடாக்கப்பட்ட உணவு வகைகளில் திரட்டப்பட்ட கொழுப்பின் உயர்பகுதி உடலைச் சென்றடையும். ஆனால் சமிபாடு அடையாது. இது அப்படியே உடலில் படிந்திருந்தது இரத்தக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தும்.

அதேபோல மின்னலைக் கற்றைகள் மூலம் சூடாக்கப்பட்ட உணவு வகைகளை உண்ணும்பொழுது, குருதியிலுள்ள வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் அளவு அதிகரிக்கும். சாதாரண மனிதருக்கு செங்குருதி மற்றும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் அளவு உடலில் சமமாக இருக்கவேண்டும். இந்த விகிதத்தில்



யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி
நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
2019ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள், சிறுவர்களுக்கான
ஆடை வகைகள் மற்றும் அனைத்து
கவறிங் நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

மாற்றம் ஏற்படுகின்ற போதுதான் உடல் நோய் வாய்ப்படுகிறது. அதேபோல மின்னலைக் கற்றைகள் மூலம் சூடாக்கப்படும் உணவில், குழைமப் **(plastic)** பொருளின் மூலக்கூறுகள் பரவ வாய்ப்புண்டு. காரணம் இந்த மின்சூடாக்கிகள் அனைத்தும் குழைமப் பொருட்களினாலேயே உருவாக்கப் பட்டவை.

இதற்கு அடுத்ததாக நீங்கள் உபயோகிக்கும் ஆவிமூலமான அழுத்தச் சமையல். ஆங்கிலத்தில் ***Pressure Cooker*** என்பார்கள். இதை உபயோகித்து நீங்கள் சமைப்பதை விட, வெறுமனே அரிசியை வாயில் போட்டு மென்றுவிட்டு நீரருந்தி விடலாம். சோறு அதிகமாக உண்கின்ற, அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழுகின்ற பெரும்பாலானோரின் நீரிழிவு நோய்க்கு இந்த அழுத்தச் சமையலும் ஒரு காரணம். அரிசியில் ***(250g)*** சாதாரணமாக ***44.5g*** மாப்பொருள் (காபோகைதரேற்று) உள்ளடக்கப்பட்டிருக்கும்.




ஆவியில் அழுத்தி அவிக்கும் பொழுது இந்த மாப்பொருளின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு, அது வெளியேற வாய்ப்பிருப்பதில்லை, அது மீண்டும் சோற்றுடனேயே கலந்துவிடும். (தாயகத்தில் பானையில் அரிசியை இட்டு அவிக்கும் போது, ஆவியுடன் வெளியேறும் வாய்ப்பு அதிகம்) மீண்டும் சோற்றுடன் கலந்த மாப்பொருளும், அரிசியில் இயற்கையாகக் கலந்திருக்கும் சீனிப்பொருளும் உடலில் நேரடியாகக் கலந்து, உடல் தனது தேவைக்காகத் தயாரிக்கும் இன்சுலின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். இதுவே


வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**

கொஞ்சம் கொஞ்சமாக நீரிழிவு நோயாக மாறும்.

இவ்வாறான அழுத்தச் சமையல் பாத்திரங்கள் மூலம் சமைக்கப்படும் உணவில், பாத்திரத்தின் மேற்பகுதியில் பூசப்பட்டுள்ள அலுமினியம் எனப்படும் உலோகப்பொருள் ***3 - 6 mg*** வரையில் கலக்க வாய்ப்பிருக்கிறது.

இப்பொழுது மிக இலேசான அலுமினியத் தட்டினை (*foil*) பெரும்பாலான மக்கள் தங்கள் மீன் / மாமிசம் அல்லது காய்கறிகளை வறுக்கப் பயன்படுத்துகிறார்கள். பெரும்பாலும் இம்மாதிரியான தட்டுகள் மற்றும் அலுமினியத்தாலான பாண்டங்களைத் தவிர்ப்பது மிகச்சிறந்தது. அல்சைமர் என்ற நோயைப் பற்றிய ஒரு கட்டுரையில், இம்மாதிரியான அலுமினியப் பயன்பாடுதான் கொடிய அல்சைமர் மற்றும் பிற நரம்பியல் நோய்களுக்கான காரணிகளாக தொடர்பு படுத்தப் பட்டுள்ளது.

உணவு தட்டில் ஒட்டாத வகையில் தயாரிக்கப்பட்டு வரும் பாத்திரங்களில் ஒரு விதமான அமிலக்கலவை காணப்படுகிறது. இவ்வாறான பாத்திரங்களின் மேற்பூச்சுக்காக பெர்புளூரோக் அமிலம் பயன்படுகிறது. கருவுறாமை, கற்றல் பலவீனம் மற்றும் எடை அதிகரிப்புக்கு இந்த இரசாயனம் காரணமாகிறது. புற்றுநோய் ஆராய்ச்சிக்கான சர்வதேச நிறுவனம் மனிதர்களின் புற்றுநோய்க்கு காரணியாக இந்த அமிலத்தை வகைப்படுத்தியுள்ளது. இதற்கான சிறந்த மாற்று இரும்பு, கண்ணாடி அல்லது துருப்பிடிக்காத எஃகுப் பாத்திரங்கள் ஆகும். அதே போல குழைமத்தால் ஆன பொருட்களில் தேநீர் அருந்துதல், உணவுக்குப் பயன்படுத்துதல் ஆகியனவும் கேடான அமிலங்கள் உடலோடு கலக்க வழிவகுக்கும்.

உடல் உங்களைத் தாங்கும் தூண் போன்றது. அதற்கு நீங்கள் பாரமாக மாறிவிடாதீர்கள்.








# இலங்கையில் அரசியல் படுகொலைகளும், தமிழ் இன வெறுப்பு அரசியலும்!

இரண்டு தடவைகள் யாழ்ப்பாணம் வந்து, யாழ் மக்களுடனும், புலிகளின் யாழ் தளபதி கிட்டுவுடனும் நல் உறவை ஏற்படுத்தி, தமிழருக்காக பரிந்து, நல்லிணக்க அரிசியல் செய்ய முற்பட்ட உண்மையான சிங்களவர், முன்னணிச் சினிமா நடிகர், பண்டார நாயக்கா. ஸ்ரீ மாவோவின் புதல்வி சந்திரிகாவை மணம் புரிந்தவர் என்ற காரணத்தால், சந்திரிகா அமோக மக்களின் ஆதரவைப் பெற்று இரண்டு முறை ஜனாதிபதி பதவி பெற, விஜயின் புகழும், புலிகள் தமிழ் மக்களின் உறவும், பலமும் கிடைக்க விஜயின் அரசியல் முற்போக்கு இன ஒற்றுமை முயற்சிகள் உதவின.

இலங்கையில் பண்டார நாயக்காவின் படு கொலை முதலாவது அரசியல் தலைவரைப் பலி கொண்டது என்றால், இரண்டாவது அரசியல் படு கொலையாக விஜயின் படு கொலை அமைந்தது எனலாம். பண்டார நாயக்காவின் படு கொலை சர்வதேச ஆதரவோடு இடம் பெற்றதை, அந்த வழக்கில் முக்கிய சாட்சியாக அவரது மனைவி ஸ்ரீ மாவோ விசாரணை இன்றியே பல சந்தேகங்களுக்கு பதில் தேடாத தீர்ப்பை, நீதி மன்றம் வழங்கி, வெளிநாட்டு தொடர்புகளை மறைத்து விட்டது. இருப்பினும் இலங்கை அரசியல் தடம் புரளாது ஸ்ரீ மாவோவின் ஆட்சிக் காலம் கழிந்தது.

ஆனால் *1977*ல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஸ்ரீ மாவோவின் குடி உரிமையைப் பறித்து, தமது அமெரிக்க சார்பு ஆட்சியை *1987* வரை நடத்திக் காட்டினார். அதே வேளை அமெரிக்கா பல்வேறு ஒப்பந்தங்களையும் சீதுவையில் அமெரிக்காவின் குரல் ***(VOICE OF AMERICA)*** என்கிற வானொலியின் அஞ்சல் நிலையத்தையும் நிர்மானித்துக் கொண்டது. இதுவே இந்திரா காந்தியின் கோபத்துக்கும், ***1983*** கறுப்பு ஜூலை தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், இராணுவ நடவடிக்கைகள், முள்ளி வாய்கால் இன அழிப்பு என இன்றும் தொடரும் அவலம் நிலவக் காரணம். இவற்றைக் காணும் பொழுது பண்டார நாயக்காவின் கொலையில், அமெரிக்காவின் கரங்கள் இருக்கலாம் என்கிற ஐயப்பாடு வழக்கு நடைபெற்ற வேளையிலேயே பேசப்பட்டது.

இலங்கையில் தமிழ் இன வெறுப்பு அரசியலை, சிங்கள மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தவர், அநகாரிக தர்மபாலா என்ற புத்த மதப் பெயராக மாற்றிக் கொண்டு, ஆரிய சிங்கள பௌத்த அடையாளத்தை அறிமுகம் செய்த பெருமகன்.

அவரால் முன்னெடுக்கப் பட்ட ஆரிய பௌத்த, சிங்கள இன மேலாதிக்க வெறியை ஊட்டி வளர்த்த பெருமை இவருக்கே உரியது. சிங்கள மக்களிடையே பேரினவாத அரசியலை, தமிழ் இன வெறுப்பு அரசியலுக்கு வித்தாக இன்றும் சிங்கள அரசியல் கட்சிகளின் ஆதர்ச புருடனாக விளங்கும் இவரை, அறியாத சிங்கள

மக்கள் யாருமே இருக்க முடியாது.

அதற்குக் காரணம், அவர் புத்த துறவியாக மாறி, அநகாரிக தர்மபாலா எனப் பெயரை ஏற்று, புத்த மத பிரச்சாரத்தை உலக நாடுகளில் முன்னெடுத்தும், இந்தியாவில் அழிந்து போன நிலையில் இருந்த புத்த மதத்தை, மீளாக்கம் செய்து அழிவிலிருந்து மீட்டார். அதற்கு நன்றிக் கடனாக இந்திய அரசே அவரது படத்துடன் அஞ்சல் முத்திரை வெளியிட்டுக் கெரவித்தது.




அவரது ஆரிய பௌத்த சிங்களப் பேரினவாத சித்தாந்தம் இலங்கைத்தீவு, பௌத்த சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது. புத்த பெருமான் புத்த மதத்தை பாதுகாக்கும் பொறுப்பையும், இலங்கைத் தீவையும் சிங்கள மக்களிடமே ஒப்படைத்தார் என்ற மஹாவம்சம் புதிவு செய்த கூற்றை, தமது அயராத பிரச்சாரத்தின் மூலம் சிங்கள மக்களிடையே 1890களில் பிரச்சாரப் படுத்தியதன் விளைவாக, 1915ம் ஆண்டு வடக்கு கிழக்குத் தமிழர் மாகாணங்கள் தவிர்ந்த மீதி 7 மாகாணங்களிலும், முஸ்லீம்களின் வீடுகள், வணக்க தலங்கள், வியாபார தலங்கள் அனைத்தையும் சிங்கள மக்களின் வன்செயல்கள் தீவைப்பு, கொலை, கொள்ளைகளுக்கு உள்ளானது.

இலங்கையில் இடம் பெற்ற சிங்கள பேரினவாதத் தாக்குதலின் தொடக்கமே இந்த ஆண்டில்தான் ஏற்பட்டது. அப்பொழுது ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஆளுநரால், இராணுவச் சட்டம் அமுலாக்கப்பட்டு அந்தக் கலவரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. டி.எஸ். சேனா நாயக்க சேர் பாரோன் ஜயதிலக்கா உள்ளிட்ட சிங்களத் தலைவர்களை, பிரித்தானிய ஆளுநர் சிறையில் இட்டார். இக்கலவரத்துக்கு காரண கர்த்தாவாக இருந்த அநகாரிக தர்மபாலா இந்தியாவுக்கு ஓடி, வங்காளத்தில் ஒளிந்து கொண்டார்.

இந்தியாவில் மருத்துவ தேவைக்காகத் தங்கி இருந்த சேர்.பொன்.இராமநாதன் கால்களில் விழுந்து, கைதான சிங்களத் தலைவர்களை மீட்கும்படி கேட்டுக் கொண்டதன் பேரில், 2ம் உலகப் போரில் கடல் பயணங்களுக்கு இருந்த ஆபத்துக்களையும், தமது சொந்த உடல் நலத்தையும் பாராமல் இங்கிலாந்து சென்று



வாதாடி, சிங்களத் தலைவர்களை விடுவித்தும், இலங்கையின் ஆளுநரை இடமாற்றம் செய்வித்தும், கொழும்பு திரும்பினார்.



கொழும்புத் துறை முகத்தில் தமது குதிரை வண்டியில் வீடு சேர புறப்பட்ட இராமநாதனை, சிங்களத் தலைவர்கள் குதிரைகளை அவிழ்த்து விட்டு, தாமாகவே இராநாதனைக் குதிரை வண்டியில் வைத்து கொழும்பு 7வாட் பிளேஸில் இருந்த அவரது வீடு வரை இழுத்துச் சென்று கௌரவித்தனர்.

அன்று அவரால் காப்பாற்றப்பட்ட சிங்களத் தலைமையால், இன்று அவருக்கு வாக்களித்து பதவி பெற உதவிய வலி வடக்கு மக்களும், மொத்த தமிழ் இனமும் இனப்படு கொலைக்கு ஆளாகி, நடுத்தெருவில் அலைகிறது. அந்த நிகழ்வில் இராமநாதன் சிங்களத் தலைவர்களின் விடுதலைக்கு உதவினார் என்ற காரணத்தால், முஸ்லிம் தலைமை தமிழ் மக்களை வெறுத்து ஒதுக்கி, சிங்களம் 1915ல் செய்த கொடுமைகளை மறந்து, இன்று தமிழ் மக்களைச் சிங்களம் அழிக்க, முஸ்லிம் தலைவர்கள் ஆதரவு கொடுத்து உதவுகிறார்கள்.

**அறத்தின் வழியே வாழ்ந்து மடிந்த இராமநாதனும், பிரபாகரனும், தமிழ் மக்களும் மரண தண்டனை அனுபவித்த கொடுமை ஏற்பட்டது. அன்றைய வில்லன் அநகாரிக தர்மபாலா, விவேகானந்தர் போன்ற பெரியோர்களோடு பழகிய போதிலும் அவனும், அவனது இனமும் ஆறறிவு கொண்ட மனிதராகக் கூட இருக்க வில்லை என்பதை வரலாறு காட்டுகிறது.**

எப்படி கணவன் பண்டாரநாயக்காவின் படு கொலையை பயன்படுத்தி, ஸ்ரீ மாவோ தமது அரசியலை மக்களின் ஆதரவைப் பெறாமலே செனற் சபை உறுப்பினராகி, பிரதமர் பதவியைப் பெற்று, உலக அரசியல் தலைவர்களில் ஒருவராக தம்மை வளர்த்துக் கொண்டாரோ...? அவரது மகள் சந்திரிகாவும் கணவன் குமாரதுங்கவின் கொலையில், தமது அரசியலைத் தொடங்கினார்.

விஜய் குமாரதுங்க மேற்கொண்ட அரசியல், அவரை மக்களின் தலைவனாக உயர, தமிழ் மக்களின் ஆதரவும் பெருகிய வேளையில் அவரைக் கொலை செய்ய, ஜே.வி.பி. எனப்படும் ஜனதா விமுக்திப் பெரமுனையின் பிரிவான தேசப் பிரிய மக்கள் அமைப்பின் வேண்டுதலுக்கு இணங்க, கொலை செய்ததாக 16 வருடங்களின் பின்னர் பகல முல்லகே லயனல் றனசிங்க என்பவர் கண்ணீரோடு சீ.ஐ.டீ பொலிசாருக்கு




## சுவிஸ்வாழ் எம் தமிழ் உறவுகளுக்கு ஓர் அறிய வாய்ப்பும் ஓர் விழிப்புணர்வும்

### சுவிஸ்வாழ் நம் தமிழ் உறவுகளே!

**உங்கள் சம்பளத்தில் கழிக்கப்படுகின்ற தொகை அல்லது ஏற்கனவே கழித்த தொகையை சரியானதாக கழிக்கப்பட்டுள்ளதா? என்பதை நாம் உங்களுக்கு சரிபார்த்து திறம்பட செய்து தருவோம். தற்போது நீங்கள் சுவிசில் தொழில் செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது தொழில் செய்த பின் வேலை இழந்தவரா? அல்லது ஓய்வூதியம் பெறுபவரா? அல்லது தொழில் செய்த கணவரை அல்லது மனைவியை இழந்தரவா? நீங்கள் உடனே எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

எமது சகல தமிழ் உள்ளங்களின் பணங்களை சரியான முறையில் கழிக்கப்பட்டுள்ளதா? என்பதை நாம் அறிந்து உங்களுக்கு மீளப்பெற வழிவகை செய்து தருவோம். உங்களுக்கு எந்த வித பணமும் இல்லை என்றால் இவை சம்பந்தமாக நாங்கள் உங்களிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடமாட்டோம் என்பதை மிக உறுதியாக தெரியப்படுத்துகிறோம். அத்துடன் உங்கள் பண விபரங்கள் சரியானதாக உள்ளது என்பதை எங்களின் உத்தரவாத படிவத்தையும் உங்களுக்கு இனாமாக அனுப்பி வைப்போம். ஆகவே சுவிஸ்வாழ் உங்கள் உறவுகளுக்கு எங்களின் இந்த நல்ல திட்டத்தை அறியப்படுத்துமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.



பண விபரங்கள் மற்றும் அதன் நிலைமையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் தெரியப்படுத்துவோம். அத்துடன் உங்கள் விபரங்களை நாம் மிக இரகசியமாக கையாளுவோம் என்பதையும் அறியத்தருகிறோம். இத்திட்டத்தில் நீங்கள் இன்றே இணைந்துகொள்ளுங்கள். விண்ணப்பப் படிவத்திற்கும் மற்றும் இதர விபரங்களுக்கும் நீங்கள் மின்னஞ்சல் மூலமாக அல்லது எமது விலாசத்திற்கு எழுத்து மூலமாக தொடர்பு கொள்ளவும்.

அறிவித்தல் : சுவிஸ்சலாந்தில் வேலை செய்து விட்டு பின் வேறு நாடுகளில் வாழும் எம் உறவுகளின் சம்பளத்தில் கழிக்கப்பட்ட கழிவுத்தொகையை அவர்களுக்கு நேரடியாக கிடைக்கப்பெற வழிவகைகளை நாம் சுமார் 24 வருடங்களாக திறம்பட செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகிறோம்.

DHARMARAJAH CONSULTING
தர்மராஜா கன்சல்டிங்

www.dharmarajahconsulting.com
E.Mail : dharmarajah.consulting@hotmail.com

**Dharmarajah Consulting Switzerland**
**Mr.Pasupathy Dharmarajah**

**Haldenwiesli 19a, CH 8207 Schaffhausen, Switzerland.**

நீங்கள் வியர்வை சிந்திய பணம், தாயகத்தில் ஒருவேளை கஞ்சிக்கு வழியில்லாதவர்களுக்கு போனால் என்ன?

# Swiss Life
## Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்


**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch


Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















வழங்கிய 141 பக்க ஒப்புதல் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

1987 இந்திய அமைதிப் படையின் வருகையை எதிர்த்து, ஜே.வி.பி நடத்திய தாக்குதல்களின் தொடர்ச்சியாக விஜயின் கொலை நடத்தப்பட்டது என்பதும், விஜயின் பிரபலம் அவரை பல்வேறு காரணங்களுக்காக கொன்று விட்டுப் பழியை ஐ.தே.க. மீது போட்டார்கள் என்பதும், இப்பொது வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

ஆனால் பல முக்கிய நபர்களையும், தமது கணவரையும் கொலை செய்தது ஜே.வி.பி. என்பது உறுதியாகத் தெரிந்த பின்னரும், எப்படி சந்திரிகா அவர்களுடன் கூட்டு வைத்து விஜயின் கொலையை ஐ.தே.க. மீது அபாண்ட மாகப் பழி சுமத்திப் பேசி, அரசியல் செய்தார் என்பது பலருக்கு இன்று பொறுக்க முடியாமல் இருப்பதாக செய்தி கூறுகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பண்டார நாயக்கா கொடியவனாக நடந்து கொண்டாலும், தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்து, மனிதத்தோடு நடந்து கொண்டார். அந்த ஒப்பந்தத்தை கிழிக்க வைத்தது ஜே.ஆரின் எதிர்ப்பு. ஆர்ப் பாட்டங்கள் மட்டும் இல்லாமல் போயிருந்தால், பண்டா- செல்வா ஒப்பந்தப் படி வடக்குக் கிழக்குப் பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்டு, ஒன்றிணைந்த இலங்கையில் அனைவருக்கும் அமைதியான வாழ்க்கை கிடைத்திருக்கும்.

ஆனால், அவரைத் தொடர்ந்து வந்த ஸ்ரீ மாவோ தமிழ் மக்களின் அமைதி வழிச் சத்தியாக் கிரகப் போராட்டத்தை முதன் முறையாகச் சிங்களப் படை கொண்டு ஆக்கிரமித்து, தமிழர் பிரதேசங்களில் படை



சுவாமி விவேகானந்தரோடு ஆன்மீக தேடல் நடத்தும் அநாகரிக தர்மபாலா தாடி, மீசையுடன் சட்டத்தின் பிடியில் தப்பி வாழ்ந்த காட்சி.

முகாம்களை நிறுவி, இராணுவ ஆட்சிக்கு வித்திட்டார்.

அவரது மகள் சந்திரிகாவோ, தமிழ் மக்களைக் கணவன் விஜயின் செல்வாக்கால் 2 முறை ஜனாதிபதியாகத் தெரிவாகி, அதே தமிழ் மக்கள் மீது, இராணுவ விமானக் குண்டு வீச்சுகளை நடத்தி வீடுகள், கோயில்கள், பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள் எங்கும் அப்பாவி மக்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் என வகை தொகை அற்று கொன்றும், 1995ல் ஒரே இரவில் யாழ் மக்கள் 5 இலட்சம் பேரைக் கொட்டும் மழையில் கிளிநொச்சிக்கு விரட்டியும், பல இராணுவ நடவடிக்கைகள் மூலமும் தனது மூர்கத்தனத்தை வெளிப் படுத்தினார்.

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல வந்த மகிந்த ராஜபக்ஸ, சந்திரிகா உள்ளிட்ட சிங்களத் தலைமைகளால் உருவாக்கி, வளர்த்து விட்ட அரச பயங்கர வாதத்தைத் தமிழ் மக்களின் பயங்கர வாதமாகப் பிரச்சாரப் படுத்தி, தமிழின அழிப்பையும் செய்த பழியை ஏற்கும் நிலையை, இந்தியாவின் தலையீடுதான் காரணம் என்பதை உண்மை வரலாறு ஒரு நாள் பதிவு செய்துவிடும்.




GGS
FOOD SERVICE

CONTACT
R.P. PARAMESH

02305 93 73 75
017 93 91 607

உருவகக்கதை



# இன்பம் எங்கே ?

**வண்ணை தெய்வம்**

அவர் முற்றும் துறந்த மிப்பெரிய மகான். ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் தங்களுக்குள் உள்ள பிரச்சனைகளையும், சந்தேகங்களையும் அந்த மகானிடமே சொல்லிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொள்வார்கள். ஒரு நாள், ஒரு படிப்பறிவில்லாத குடியானவன் ஒருவன் மகானிடம் வந்து “ஐயா எனக்கொரு சந்தேகம்! தாங்கள்தான் விளக்கம் சொல்லவேண்டும்” என்று கேட்டான்.

“சொல் மகனே! உனக்கு என்ன சந்தேகம்? விபரமாகச் சொல்” என்றார் மகான்.

“ஐயா நான் ஒரு ஏழைத் தொழிலாளி! எனக்கு ஐந்து பிள்ளைகள்! நான் உழைத்தால்தான் என் வீட்டில் அடுப்பு எரியும்! எப்படியோ இதுநாள்வரை என் குடும்பம் பசி, பட்டினி இல்லாமல் வாழ்ந்து வந்திருக்கு! இதுக்காக நான் படுற கஷ்டம் சொல்லி மாளாது! ஆனாலும் என்னைப் பாக்கிறவங்க நீ மகிழ்ச்சியாய் இருக்கிறாய்! நீ இன்பமாய் வாழுறாய்! எண்டெல்லாம் சொல்லுறாங்க. உண்மையிலேயே நான் கஷ்டப்பட்டுத்தான் வாழுறன். அவங்ளெல்லாம் ஏன் அப்பிடிச் சொல்லுறாங்க? இன்பம் எண்டால் என்ன? மகிழ்ச்சி எண்டால் என்ன? சொல்லுங்க சாமி” என்றான்.

குடியானவனின் கேள்வியால் மகான் தடுமாறிவிட்டார்! இப்பொழுதுதான் அவர் தன்னைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார். தான் இன்பமாக இருக்கின்றேனா? மகிழ்ச்சியாக இருக்கின்றேனா? என்றும் சிந்தித்துப் பார்க்கலானார்! குடியானவனைப் பார்த்துச் சொன்னார் “மகனே நாளை வா, உன் கேள்விக்கான பதிலைச் சொல்கின்றேன்” என்றார். குடியானவன் போய்விட்டான். மகானும் புறப்பட்டுவிட்டார். எங்கு? குடியானவனின் கேள்விக்கு விடை தேடி!

இன்பம் என்றால் என்ன? மகிழ்ச்சி என்றால் என்ன? இதற்கு விடை தேடிப் புனித யாத்திரையாய் புறப்பட்டு விட்டார்! யாத்திரையில் பலரிடமும் விசாரணை செய்தார்! பதிலோ பலவிதமாகவே வந்தது! முதலில் ஒரு சமயத் துறவியிடம் தனது சந்தேகத்தைக் கேட்டார். அவர் சொன்னார் “இறைவனுடன் இரண்டறக் கலப்பதே இன்பம்! அவனுக்குப் பணிவிடை செய்வதே மகிழ்ச்சி” என்றார்.

GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45   058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch
076 / 303 22 16

**PRIVATKUNDEN & FIRMENKUNDEN** | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

வருமானக்காப்புறுதி
EINKOMMENS - VERSICHERUNGEN
வேலை இழக்க நேரிட்டால்
உங்கள் 100% வருமானத்தையும்
பெற்றுக்கொள்ள இலகுவழி

சேமிப்புக்காப்புறுதி
SPARVERSICHERUNGEN
சிறுவர்கள் முதல் பெரியர்கள்
வரை அனைவருக்குமானது

ஆயுட்காப்புறுதி
LEBENSVERSICHERUNGEN
உங்கள் குடும்பத்தின்
எதிர்காலத்தை பாதுகாத்திட

வாகனக்காப்புறுதி
FAHRZEUGEVERSICHERUNGEN
உங்கள் வாகனத்திற்கு
தேவையான
அனைத்து காப்புறுதிகளும்

வீட்டுக்காப்புறுதி
HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN
சொந்த, வாடகை வீடுகளிற்கு
அவசியமான காப்புறுதி

சட்டக்காப்புறுதி
RECHTSSCHUTZVERSICHERUNG
ஒவ்வொரு சட்டம் சார்ந்த
தேவைகளிற்கும்
அவசியமானது

மருத்துவக்காப்புறுதி
KRANKEN & UNFALLVERSICHRUNGEN
அனைத்து விதமான
மருத்தவ சேவைகளிற்கும்
தேவையான சிறந்த காப்புறுதி

வீட்டுக்கடன்
HYPOTHEKEN
உங்கள் சொந்த
வீட்டுக்கனவை
நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு
தேவையான ஆலோசனைகளை
இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில்
அனைத்தின மக்களினதும்
நம்பிக்கைக்குரியதும் இலாபம்
தரவல்லதும் எமது நிறுவனம்

கலா ரசிகன் ஒருவனைச் சந்தித்துக் கேட்டார். அவன் சொன்னான் "கலைகளை ரசிப்பதே இன்பம் என்றான்".

ஒரு தொழிற்சாலையின் முதலாளியிடம் கேட்டார்! முதலாளி சொன்னார் "பணம்! மேலும் பணம்! மேலும் மேலும் பணம்!. பணம் இருந்தால் இன்பமும், மகிழ்ச்சியும் தானாக வந்துவிடும் என்றார்!.

ஒரு தலைசிறந்த கல்விமானிடம் தனது சந்தேகத்தைக் கேட்டார். அவர் சொன்னார் "எல்லா மொழிகளையும் கற்க வேண்டும்! உங்களைப் போல் ஞானிகளும், மகான்களும்கூட தங்கள் சந்தேகங்களை என்னிடம் கேட்க வேண்டும். அதுதான் இன்பம் என்றார்.

தனது தொடர் பயணத்தில் சந்தித்த சிற்றின்பப் பிரியன் ஒருவனிடமும் தனது சந்தேகத்தைக் கேட்டார். அவன் சொன்னான் மதுவும், மாதுக்களையும் விட இந்த உலகத்தில் இன்பமே கிடையாது!" என்றான்.

மகா சோபேறி ஒருவனிடமும் இதே கேள்வியைக் கேட்டார்! அவன் சொன்னான் "சுகமான தூக்கத்தில் கிடைக்கும் இன்பம் வேறெதிலுமே கிடைக்காது" என்றான்

வழியில் சந்தித்த சருமரோகி ஒருவனிடம் கேட்க! அவனோ "உடம்பில் அரிப்பு ஏற்படும் போது சொறிவதில் உள்ள இன்பம், வேறெதுவிலுமே கிடைக்காது" என்றான் சொறிந்தபடியே!.

இவற்றில் உண்மையான இன்பம் எது? என்பது புரியாத மகான் இன்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் விடைதேடி அலைந்தபடி ஒரு கிராமத்திற்குள் சென்றார். அங்கு பலவிதமான தொழில்களைச் செய்பவர்களெல்லாம் கிராமத்திற்குள் ஒரு மகான் வந்திருக்கின்றாரே! என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், தாங்கள் தங்கள் தொழில்களைச் செய்வதிலிலேயே முனைப்பாக இருந்தார்கள்.

அதில் ஒரு விவசாயியை மறித்து, அவரிடம் தனது சந்தேகத்தைக் கேட்டார்! விவசாயி சொன்னார் "சாமி உழைக்க வேணும்! உழைத்த கையோடு அதற்கான ஊதியத்தை வாங்கும் போது கிடைக்கும் இன்பத்திற்கு இணையே கிடையாது" என்று அவன் சொல்லும் போது அந்த விவசாயின் முகத்தில் மலர்ந்த இன்பம்ஞ் மகிழ்ச்சி... இவையெல்லாம் காலைக் கதிரவனைப் போல இருந்தது!.

பலரும் பலவிதமாக சொன்னதினால் மகானுக்கு இப்பொழுது குழப்பம் அதிகமாகிவிட்டது! ஒரு மரத்தடியில் அமர்ந்து சகல வாக்கு மூலங்களையும் அலசி, ஆராய்தார். தெளிவு பிறக்கவில்லை!

விவசாயி தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்! மகானிடம் தனது சந்தேகத்தைக் கேட்ட குடியானவனும், உழைக்கப் போய் விட்டான்! மகானோ இதுநாள் வரை உடலை வருத்தி, உழைத்து வாழ்ந்தவர் அல்ல! அவருக்கு உழைப்பின் பெறுமதி தெரியாது! அதனால் இன்னமும் தேடிக்கொண்டே இருக்கின்றார் "இன்பம் எங்கே? மகிழ்ச்சி எங்கே?" என்று.


THOOYA COMMUNICATION




Lyca TV BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

CENTURY
TRAVELS GMBH

Emirates

Emirates Sommer 2018

SRILANKA -COLOMBO

Direct Booking Nr.: 017621682149

ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை

2019ம் ஆண்டின் கோடைகால
முன்பதிவுகள் ஆரம்பம்

**Juli-2019 ab599€**



அங்கத்தவர்களாக இணையும்
வர்த்தகர்களுக்கு
விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.

தொடர்புக்கு 0176 216 82 149
(Gültig nur mit gewerbe ammeldung)

Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal

web : www.centurydravels.de email : info@centurytravels.de

ஒருவருட Lebara Play அன்பளிப்பு

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்

# Radio - by - Phone

வாசகர்கள் மற்றும் நண்பர்களுக்கு.....
எமது சித்தரை புத்தாண்டு நல்வாழ்த்துகள்

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15
YEARS
ANNIVERSARY

மேலதிக விபரங்களுக்கு...

**www.etr.fm**